பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 11 செவ்வாய்க்கிழமை 27.07.2021 கதிர் 264

### இனிது ரகசியம் அல்ல!

யாழ்.மாவட்ட அரச அதிபரை மாற்றி ஒரு சிங்களவரை அந்தப் பதவிக்குக் கொண்டு வரப்போகின்றார்கள் எனக் குறிப்பிட்டு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. எழுதினார் எனக் கூறப்படும் கடிதம்தான் பக்கம்02

# கரவெட்டியில் புதிய கொத்தணி 49 பேருக்குக் கொரோனா உறுதி

## ஆலயத் திருவிழாவில் பங்கேற்றவர்களே அடையாளம்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் வடமராட்சி, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 49 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 2

## 48 பேர் சாவு!

இலங்கையில் மேலும் 48 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 11

## 1,653 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் மேலும் 1,653 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதற்கமைய நாட்டில் இது வரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் 11

## அனைத்து மாவட்டங்களிலும் 'டெல்டா' வைரஸ் தாண்டவம்!

### சுகாதார அமைச்சு அபாய எச்சரிக்கை

இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும் 'டெல்டா' வைரஸ் பரவியுள்ளது என்றே நாம் கருதுகின்றோம். அதற்கமைய ஒவ்வொரு மாவட்டத்திலும் டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் இருக்கலாம்.

– இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசியபோதே 2

## O/L பரீட்சை அடுத்த வருடம் பெப்ரவரியில்

2021ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை அடுத்த வருடம் நடைபெறும் என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.

அதன்படி அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 2

## ஹிஷாலினியின் சடலத்தை தோண்டி எடுத்து மீள் பரிசோதனைக்கு அனுமதி

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலை செய்த நிலையில் தீக் காயங்களுடன் மர்மமான முறையில் உயிரிழந்த டயகம சிறுமி ஹிஷாலினியின் சடலத்தின் மீதான பிரேத பரிசோதனைகளை மீள 2

## ரிஷாத்தின் மனைவி உட்பட நான்கு பேருக்கும் மறியல்!

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய சிறுமியின் மரணம் தொடர்பில் கைது செய்யப்பட்டுளவர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் 9ஆம் திகதி வரையில் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் 11

## மாகாண அதிகாரம் பற்றிய நிலையை விக்கியின் வழக்கு அம்பலப்படுத்துமாம்



### கஜேந்திரகுமார் எதிர்பார்ப்பு

(இ.கலையமுதன்)

வடக்கு மாகாணப் பிரதம செயலாளரின் நியமனம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்ய விருப்பது மாகாண அதிகாரம் பற்றி மக்களுக்கு உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்குப் 2

## வவுனியாவில் 25 பேருக்கு கொரோனா

(வவுனியா நிருபர்)

வவுனியா பழைய பஸ் நிலையக் கடைத் தொகுதியில் 2

## கோட்டா - சு.க. பேச்சு வெற்றி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான பேச்சு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. 2







## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று கொழும்பில் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் அதிகம் பேசப்பட்டது.

*"யாழ்.அரச அதிபரை மாற்றும் எண்ணம் மேலிடத்துக்கு உண்டு. அது உண்மைதான். அதே நிலைமைதான் ஆளுநர் விடயத்திலும் அரசுத் தலைமைக்கு. சில திருப்தியீனங்கள் உள்ளன என்பது உண்மைதான். அவர்கள் மாற்றப்பட வாய்ப்புண்டுதான். ஆனால் அந்த இடத்துக்கு தமிழரல்லாத ஒருவரை நியமிக்கும் எண்ணம் இதுவரையில் மேலிடத்துக்கு இல்லை"* - என சம்பந்தப்பட்ட வட்டாரம் ஒன்று கோடி காட்டியது.

வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராக சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டமையால், அதே பாணியில் அரச அதிபரும் நியமிக்கப்படலாம் எனக் கற்பனை பண்ணிக் கொண்டு விட்டார் போலும் சம்பந்தன் என்று அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

அந்த வட்டாரங்கள் இன்னொரு நியாயமான கேள்வியையும் எழுப்பின.

இத்தகைய விடயங்களைக் கையாளும் பொறுப்பும் தீர்மானிக்கும் அதிகாரமும், ஜனாதிபதிக்குரியவை; பிரதமருக்குரியவை அல்ல. எனவே இது விடயத்தில் சம்பந்தன் முறையீடு செய்யத் தீர்மானித்தால் அதனை ஜனாதிபதிக்கு அல்லவா அனுப்பியிருக்க வேண்டும்? அவர் ஜனாதிபதிக்கு அனுப்பவில்லை. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கே அனுப்பியுள்ளார். ஏன்? ஜனாதிபதியுடன் ஊடாட அவர் விரும்பவில்லையா?

அப்படியானால், இனிமேல் இத்தகைய முறையீடுகளை அவர் ஜனாதிபதிக்கு அனுப்பாமல் பிரதமருக்குத்தான் செய்வாரா? ஜனாதிபதி மீது சம்பந்தன் நம்பிக்கை இழந்து விட்டாரா? அதனால் தான் பிரதமருடன் மட்டும் ஊடாட அவர் விரும்புகின்றாரா? - என்று கேள்விகள் எழுப்பியது அந்த வட்டாரம்.

விடை என்னிடம் இல்லை. அது சம்பந்தருக்குத்தான் வெளிச்சம் என்றேன் நான்.

★ ★ ★

வெளிநாட்டில், வெளிநாட்டுக் கரன்ஸியில் இருக்கும் தங்கள் பணத்தைக் காரணம் காட்டாமல், சம்பாதித்த வழிமுறையைத் தெரிவிக்காமல், உழைப்புக்கான வருமானவரி கூடச் செலுத்தாமல், நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு வழி செய்யும் அரசின் உத்தேச சட்டம் இன்று உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகின்றது.

முறையற்ற விதத்தில் - கொமிஷனாகவோ, ஊழல், லஞ்சம், மோசடி மூலமோ சுருட்டிய கறுப்புப் பணத்தை நாட்டுக்குள் காரணம், விளக்கம், வியாக்கியானம் காட்டாமலேயே கொண்டு வந்து, நாட்டுக்குள் தாராளமாக - கேட்டுக் கேள்வி, விசாரணைகளுக்கு இடமளிக்காமலேயே - செலவழிக்க இந்தச் சட்டம் உதவுகின்றது.

அதாவது கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாகப் பணச் சலவை செய்வதற்கு அரசு உத்தரவாதம் அளிக்கின்றது.

மோசடி, லஞ்சம், ஊழல் மூலம் பணம் சம்பாதித்து வெளிநாட்டில் கறுப்புப் பணமாக பதுக்கி வைத்திருந்தால், அதனை நீங்கள் வெள்ளைப் பணமாக்கும் வாய்ப்பை அரசே தரும் என்ற ஊக்கு விப்பை உறுதிப்படுத்துகிறது இந்த அரசு.

இந்தச் சட்ட மூலத்துக்கு எதிராக ஏழு மனுக்கள் வரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன அதில் ஒரு மனுவை மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் தாக்கல் செய்துள்ளது. அந்த மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இன்று உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதாடுகின்றார்.

இரண்டு, மூன்று நாள்கள் உயர்நீதிமன்றத்தில் விசாரணை நீடிக்கக் கூடும் என்று நம்பப்படுகின்றது.

நீதியரசர் பிரியந்த ஜயரத்ன தலைமையில் நீதியரசர்கள் குமுதினி விக்கிரமசிங்க, நீதியரசர் ஷிரான் குணரத்ன ஆகியோரைக் கொண்ட மூன்று நீதியரசர்கள் ஆயத்தின் முன் இந்த வழக்கு நடைபெறவுள்ளது.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் சுமார் ஏழெட்டு வருடங்களுக்கு முன்னர் அப்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்த பஸில் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் திவிநெகும சட்டத்தின் மூலம் பறிக்கப்பட்ட போது பஸில் தரப்பில் அரச சட்டத்தரணியாக முன்னிலையாகி, அந்தச் சட்டத்தை ஆதரித்து உயர்நீதிமன்றத்தில் வாதிட்டவர்தான் இப்போதைய நீதியரசர் பிரியந்த ஜயரத்ன. அவர்தான் இப்போது இந்த வழக்கை விசாரிக்கும் ஆயத்தின் தலைவர். பார்ப்போம். தீர்ப்பு எப்படி வருகின்றது என்பதை...!

– மின்னல் –

## கரவெட்டியில் புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கரவெட்டி தெற்கில் அமைந்துள்ள முருகன் ஆலயம் ஒன்றில் அண்மையில் திருவிழாவில் பங்கேற்ற பக்தர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எழுமாறாக 179 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 49 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

ஆலயத் திருவிழாவில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என அறியப்பட்ட நிலையில் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையிலேயே தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்கள் அதிகம் அடையாளம் காணப்பட்டுள்ளதால் கரவெட்டி தெற்கு கிராமத்தைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனச் சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## மாகாண அதிகாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொருத்தமானதாக அமையும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இன்று வடக்கு - கிழக்கில் தாங்களும் தேசியவாதிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், விக்னேஸ்வரன் ஆகியோர் மக்களை ஏமாற்றி ஏதோ மாகாண சபை முறைமையில் உண்மையில் அதிகாரங்களிருக்கின்றன, ஆனால், நாங்கள் ஏமாற்றப்பட்டு அந்த அதிகாரங்களை அனுபவிப்பதற்கு அரசு மறுக்கின்றது என்ற பொய்யைச் சொல்லி இன்னும் இன்னும் தமிழ் மக்களை இந்த மாகாண சபை முறைமைக்குள் விரும்பி முடக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில்தான் வடக்கு மாகாணப் புதிய பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சமன் பந்துலசேனவின் நியமனத்திற்கு எதிராகவும், வடக்கு மாகாணப் பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக்கும் வகையில் மத்திய அரசின் கீழ் கொண்டு செல்வதற்கு எதிராகவும், வடக்கு மாகாண வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டும் செல்லும் முயற்சிக்கு எதிராகவும் வடக்கு - கிழக்கில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிகளால் வெளியிடப்படும் கண்டனங்கள், ஒப்பாரிகள் அனைத்தையும் நாங்கள் பார்க்கின்றோம்.

வடக்கு மாகாணத்தின் புதிய பிரதம செயலாளரின் நியமனம் சம்பந்தமாக வடக்கு மாகாணத்தின் அதிகாரத்தை அரசு பிழையாகப் பாவிக்கின்றது என்ற கோணத்தில் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாக விக்னேஸ்வரன் கூறியிருக்கின்றார்.

இதற்கு முன்னரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் செயலாளரொருவரின் நியமனம் சம்பந்தமாக நீதிமன்றங்கள் ஊடாகச் சென்று வாதாட வேண்டியிருந்தது. அதிலும் விக்னேஸ்வரன் தோற்றுப்போனவர். சில வேளை தற்போது அவர் அதனை மறந்து விட்டாரோ தெரியவில்லை. திரும்பவும் அவர் வடக்கு மாகாணப் பிரதம செயலாளரின் நியமனம் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார் எனத் தெரிவித்திருக்கின்றார். அவர் இவ்வாறு மீண்டும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதனால் செய்யட்டும்.

மீண்டும் மீண்டும் இந்த அரசமைப்பு ஓர் ஒற்றையாட்சி. இந்த ஒற்றையாட்சியில் முழு அதிகாரமும் மத்திய அரசிடம் தானிருக்கின்றது என்பதை மீண்டும் மீண்டும் உயர்நீதிமன்றத்தில் வலியுறுத்துவதற்கு இந்தச் சந்தர்ப்பம் நல்லதொரு வாய்ப்பாக அமையும்.

உண்மையில் தமிழ் மக்களுக்கு வடக்கு மாகாண சபையில் எந்தவொரு அதிகாரமும் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இதற்கான தீர்ப்பு அமையும்.

தமிழ் அரசியல் தலைவர்கள் மக்களுடைய உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகப் போராட வேண்டியதொரு இடத்தில், அந்தத் தலைவர்களே ஏற்கனவே எங்களுக்கு உரிமைகள் இருக்கின்றன என்ற பொய்யைச் சொல்லி மக்களை ஏமாற்றுவதற்கு முற்படும் நிலையில் மக்களின் கண் திறப்பதற்கும் இதுவொரு நல்லதொரு சந்தர்ப்பமாக அமையும்.

அந்தவகையில் விக்னேஸ்வரன் வடக்கு மாகாணப் பிரதம செயலாளரின் நியமனம் சம்பந்தமாக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவிருப்பது உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்குப் பொருத்தமானதாக அமையும் - என்றார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

25 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியாகியிருந்தன.

அதில், வவுனியா பழைய பஸ் நிலையத்தில் வர்த்தக நிலையங்களை நடத்துவோர், வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோர் என 25 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் சுயதனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட வர்த்தக நிலையங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (100)

## ஹிஷாலியின் சடலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடத்துவதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி ஹிஷாலினியின் சடலம் தோண்டப்பட்டு மீள் பரிசோதனை நடத்தப்படவுள்ளது.

ஹிஷாலியின் மரணம் மீது தமக்குச் சந்தேகம் காணப்படுவதால், சடலத்தை மீளத் தோண்டி எடுத்து, பிரேத பரிசோதனைகளை நடத்த வேண்டும் என்று ஹிஷாலினியின் பெற்றோர் கோரியிருந்தனர். சி.ஐ.டியினரும் நீதிமன்றத்தில் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தனர்.

இந்தநிலையில், சடலம் மீது புதிய சட்ட வைத்திய அதிகாரி ஒருவர் விசாரணைகளை நடத்தி, அறிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என விசாரணைகளை நடத்தும் பிரிவினர் நீதிமன்றத்திடம் கோரியிருந்தனர். இதற்கே நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

## கோட்டா - சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இந்தப் பேச்சு நடைபெற்றது.

இதில் சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி சாதாகமான பதிலை வழங்கினார் என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அரசில் சுதந்திரக் கட்சி உறுப்பினருக்கு இடையூறுகள் இன்றி செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடிய சூழலை உருவாக்குதல், தேர்தல் முறைமையில் மாற்றம் செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினோம். இதற்கு ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டார் என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் கூறினார்.

## அனைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பதிவாகும் தினசரி கொரோனாத் தொற்றாளர்களில் ஒரு குறிப்பிட்ட வீதமானவர்களில் டெல்டா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருக்கும் வாய்ப்புள்ளது.

தற்போது டெல்டா வைரஸால் பாதிக்கப்பட்ட 68 பேரும் பலரின் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தியதில் இனங்காணப்பட்டவர்கள். ஆனால், இந்த 68 ஐ விட அதிக எண்ணிக்கையிலானவர்கள் நமது சமூகத்தில் இருப்பார்கள்.

நாட்டில் ஞாயிற்றுக்கிழமை (நேற்று முன்தினம்) கொரோனாத் தொற்று உறுதியானவர்களில் 1,666 பேரில் டெல்டா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களும் அடங்குகின்றனர். எனினும், அதனை அறிவதற்கு ஒவ்வொருவரையும் அதற்கான விசேட பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.

இது சாத்தியமற்றது. எனவே அனைவரும் டெல்டா வைரஸ் கொத்தணிகள் உருவாகாமல் இருக்கும் வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் - என்றார்.

## O/L பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)21ஆம் திகதி முதல் மார்ச் 03 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறும் என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மேலும். ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நவம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் டிசம்பர் 10 வரை நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது.

நீங்கள்...
#Job OpportunitieS
பத்திரிகை, சஞ்சிகை பக்க வடிவமைப்புத்துறையில் ஆர்வமுள்ளவரா?
புதிய சிந்தனைகளைச் செயற்படுத்த விரும்புபவரா?
அழகியல் மற்றும் கருத்துப் பரிமாறல் பற்றிய புரிதல் கொண்டவரா?
ஊடகத்துறையில் வடிவமைப்பாளர்களின் முக்கியத்துவம் உணர்ந்தவரா?
ஆமெனில்... இது உங்களுக்கான சந்தர்ப்பம்!!!
துறைசார் அனுபவமுள்ளவர்கள் / ஆர்வமுள்ளோர் உங்கள் பக்க வடிவமைப்பு மாதிரிகளுடன் உடனே தொடர்புகொள்ளுங்கள்!
0773 078 799
#காலைக்கதிர்

காலைக்கதிர் Kalaikkathir

# சிறுமி ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதிகோரி வவுனியாவில் போராட்டம்

சிறுமி ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் வவுனியாவிலும் சிறுமியின் மரணத்துக்கு நீதி வேண்டி கவனவீர்ப்பு போராட்டமொன்று நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டது. வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண்கள் ஒன்றியம் மற்றும் சிவில் சமூக அமைப்பின் ஏற்பாட்டில், வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் - பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளன.

அத்துடன் எரிக்காயங்களுடன் உயிரிழந்துள்ள சிறுமி ஹிஷாலினியின் மரணத்துக்கு காரணமானவர்கள், உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களுக்கு உரிய தண்டனைகள் வழங்கப்படவேண்டும்.

குறித்த சிறுமியின் மரணத்துக்கு நியாயம் கிடைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்' என வலியுறுத்தியுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்திற்கு கடந்த 2020ஆம் ஆண்டு பணிக்குச் சென்ற 16 வயதுடைய சிறுமி, இம்மாதம் 3ஆம் திகதி தீக்காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 15ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

அதனைத்தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் குறித்த சிறுமி நீண்டகாலமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தமை தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதிய கொரோனா கொத்தணி நாட்டில் உருவாகும் அபாயம்!

## சன்ன ஜெயசுமன எச்சரிக்கை



சுகாதார வழிகாட்டுதல்களைப் பொருட்படுத்தாமல் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களிடையே புதிய கொரோனாக் கொத்தணி உருவாகக் கூடும் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜெயசுமன தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் டெல்டா மாறுபாடு பரவி வரும் நேரத்தில் இத்தகைய ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதி வழங்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியர்களுக்கு முழுமையாகத் தடுப்பூசி போடப்படவில்லை, எனவே அவர்கள் மத்தியில் புதிய கொத்தணி உருவாகலாம் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர் எனவும் சன்ன ஜெயசுமன தெரிவித்தார். தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆசிரியர்களுக்கு உரிமை இருந்தாலும் இந்தப் போராட்டங்கள் அவர்களிடையே நோய் பரவுவதற்கு வழி வகுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பில் கொரோனாத் தடுப்பூசி தொடர்ந்தும் செலுத்தப்படுகின்றது

மட்டக்களப்பில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மக்களும் ஆர்வமாக தடுப்பூசியை பெற்றுவருகின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பல பகுதிகளில், 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்று (திங்கட்கிழமை), மட்டக்களப்பு பாரதி வீதி அருணோதயம் வித்தியாலயம், சிசிலியா பெண்கள் உயர்பாடசாலை, கல்லடி சிவானந்தா வித்தியாலயம், சின்ன ஊறணி சரஸ்வதி வித்தியாலயம், சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம் ஆகியவற்றில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உபேக்ஷா சுவர்ணமாலி கைதானார்!



நடிகையும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உபேக்ஷா சுவர்ணமாலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி கட்டுகஸ்தோட்டைப் பகுதியில் இடம்பெற்ற விபத்து தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் பயணித்த வாகனம் மோட்டார் சைக்கிள் மீது மோதிய விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட உபேக்ஷா சுவர்ணமாலியை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மனித உரிமை தொடர்பான முன்னேற்றத்தை பிரித்தானியா அங்கீகரிக்க வேண்டிய நேரமிது!

## வெளிவிவகார அமைச்சு செயலர் கொலம்பகே வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 27

மனித உரிமை நிலைமை தொடர்பான இலங்கையின் நிலையான, உறுதியான முன்னேற்றத்தை பிரித்தானியா அங்கீகரிக்க வேண்டிய நேரம் இது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று பொருளாதாரத்தில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த நேரத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகள் இலங்கைக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரெக்ஸிற்றுக்கு பின்னர் இலங்கை தனது பெரிய ஏற்றுமதி சந்தைகளில் ஒன்றான பிரித்தானியாவுடன் தனது வர்த்தகத்தை மேம்படுத்த எதிர்பார்த்திருந்தது என்றும் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

குறிப்பாக நாட்டுக்கு மிகவும் தேவையான அந்நிய செலாவணியைக் கொண்டு வந்த சுற்றுலாத் துறை, கொரோனா காரணமாக பதிப்படைந்தது என்றும் குறிப்பிட்டார்.



இருப்பினும் தற்போது நாட்டில் மேற்கொள்ளப்படும் தடுப்பூசி நடவடிக்கை சுற்றுலாவுக்கு மிகவும் உகந்த சூழலை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை தந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் இலங்கை நடுநிலைமையான வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றுவதோடு, அணிசேரா கொள்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்கும் என்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

# சுன்னாகத்தில் வாள் வெட்டுக் குழுவின் தாக்குதலுக்கு இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுன்னாகம் கந்தரோடை பகுதியைச் சேர்ந்த த.நிரோஷன் (வயது 25) என்பவரே படுகாயத்துக்கு உள்ளாகி இருந்தார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த இளைஞன், வீதியால் சென்று கொண்டிருந்த வேளையில் 2 மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேர் கொண்ட குழுவொன்று வழிமறித்து வாள் வெட்டுத் தாக்குதலை நடத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் தப்பிச் சென்றுள்ள சந்தேகபர்களைத் தேடும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒவ்வொரு மாவட்டங்களிலும் டெல்டா நோயாளர் இருக்கலாம்!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் கொரோனா வைரஸின் டெல்டா மாறுபாட்டால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே தற்போதைய சூழ்நிலையை எதிர்கொள்ள மக்கள் தொடர்ந்து சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நேற்று (திங்கட்கிழமை) கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் -

தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் டெல்டா வைரஸ் பாதிப்புக்குள்ளானவர்கள் இருக்கக்கூடும் என்றும் குறிப்பிட்டார். இதற்கிடையில், இந்த ஆண்டு க.பொ.த. சாதாரணதரப்பரீட்சையை பெப்ரவரி 21 முதல் அடுத்த ஆண்டு மார்ச் 03 வரை நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.

இதேவேளை மீண்டும் வழமையான முறையில் அரச நிறுவனங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சில நிறுவனங்களின் தலைவர்கள் குறைந்தபட்ச எண்ணிக்கையிலான ஊழியர்களுடன் சேவைகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில் பயணக் கட்டுப்பாடுகள் தளர்வு தொடர்பாக மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்வரும் மாதங்களில் டெல்டா மாறுபாடு இலங்கையில் பரவக்கூடிய அபாயம் இருப்பதாகவும் மருத்துவர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.


## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2019/ 2020 (வெளிவாரி)
புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை – 2021 (11ஆம் பிரிவு)

மேற்படி குறித்த பட்டப்படிப்பிற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான தெரிவுப்பரீட்சையானது எதிர்வரும் 08.08.2021 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி தொடக்கம் 11.30 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதோர் 04.08.2021 (புதன்கிழமை) மற்றும் 05.08.2021 (வியாழக்கிழமை) ஆகிய நாள்களில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மரலை 04.15 மணி வரை) நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (021 222 3612) தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**26.07.2021**

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சிங்களமயப்படுத்தும் தீவிரம்

தமிழர்களின் பூர்வீகத் தாயகமான வடக்கு, கிழக்குப் பிரதேசம் தொடர்பில் பௌத்த, சிங்கள மேலாண்மை வெறிப் போக்குக் கொண்ட இந்த ஆட்சிப் பீடத்தின் மறைமுகமான திட்டம் – நோக்கம் – என்ன என்பது வெளிப்படையானது.

இன யுத்தத்தினாலும், புகலிட நாடுகளுக்கு பல லட்சம் தமிழர்கள் இடம் பெயர்ந்தமையினாலும், அரசின் திட்டமிட்ட அழிப்பு நடவடிக்கைகளினாலும் சிறுபான்மையினரான தமிழர்கள் தமது காலாதிகால – பூர்வீக – பிரதேசங்களான வடக்கிலும் கிழக்கிலும் கூட எண்ணிக்கையில் குன்றி வருகின்றார்கள்.

ஒரு காலத்தில் – முப்பத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர் – யாழ்ப்பாணம், கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய – யாழ் தேர்தல் மாவட்டத்திலிருந்து பன்னிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகினர். அது இன்று ஆறாகி விட்டது.

சிறுபான்மையினரான தமிழர்கள் தமது பூர்வீகத் தாயகத்திலேயே – சரித்திர காலம் தொட்டுத் தாங்கள் பெரும்பான்மையினராக வாழும் தங்கள் பிரதேசத்திலேயே – எண்ணிக்கையில் சிறுபான்மையினராக்கப்படும் அவலம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

அப்படி சிறுபான்மையினரை அவர்கள் பிரதேசங்களிலேயே சிறுபான்மையினராக்கும் நாசகாரத் திட்டத்தை மேலும் முடுக்கி விட்டு, அந்தப் பிரதேசங்களை எல்லாம் ஆக்கிரமித்து, சிங்கள மயப்படுத்தும் நயவஞ்சகத் தந்திரத்தை கோட்டா அரசு கட்டவிழ்க்கின்றது என்பது வெளிப்படை.

கிழக்கில் தொல்பொருள்களைப் பாதுகாப்பதற்கான ஜனாதிபதி செயலணி என்ற பெயரில் பாதுகாப்புச் செயலரின் தலைமையில் தனித்து சிங்களவர்களை மட்டும் கொண்ட ஒர் அமைப்பை ஏற்படுத்தியமை இந்தப் பேரினவாத நடவடிக்கைத் திமிரின் உச்சப்பட்சமான செயற்பாடுதான்.

தமிழர்களின் தாயகத்தில் சிங்களவர்களைத் திட்டமிட்ட முறையில் குடியேற்றுவதன் மூலம் தமிழர் தாயகத்தை சிங்கள மயப்படுத்தும் நாசகாரத் திட்டம் இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டதல்ல. இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கூறப்பட்ட காலத்தில் இருந்து மாறி மாறி ஆட்சிக்கு வந்த பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகள் தொடர்ந்து கையாண்ட நரித் தந்திரத் திட்டம் அதுதான்.

ஆரம்பத்தில் எல்லைப்புறப் பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு, வெற்றிகரமாக முன் நகர்த்தப்பட்ட இந்தத் திட்டம் இப்போது சிறுபான்மையினரின் – குறிப்பாக தமிழர்களின் – தாயகத்தின் மையப் பிரதேசங்கள் வரை ஊடுருவி விட்டது. அதனைத்தான் கோட்டாபயவின் அதிதீவிர பௌத்த, சிங்களப் பேரின வெறி அரசு நடத்துகின்றது.

சிங்கள மக்களின் வாக்குகளினால் மட்டுமே நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டேன் என்று கூறி அதனடிப்படையில் தனது அரசின் செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தாம் ஜனாதிபதியாகி இரண்டு வருடங்களாகியும் இன்னும் யாழ்ப்பாணப் பக்கமே தலை வைத்துப் படுக்கவில்லை.

எனினும், யாழ்ப்பாணத்தையும் – இலங்கையின் சிறுபான்மையினரான தமிழர்களின் மூளை மையமான வடக்கையும் – பௌத்த, சிங்கள மயப்படுத்தி விட்டுத்தான், அந்த வெற்றிக் களிப்பில்தான், வடக்கே அவர் வருவாரோ என்னவோ...?

அதற்கான முன்னேற்பாடுகளைத்தான் அவரது அரசு இப்போது முழு மூச்சாக மேற்கொண்டு வருகின்றது.

ஏற்கனவே பெரும்பான்மையினரான தமிழர்களைக் கொண்ட வடக்கு மாகாணத்தில், தமிழ் பேச, எழுத, ஊடாட அறிவு கொண்ட பன்னிரண்டு சிரேஷ்ட அதிகாரிகள் இங்கு பணியில் இருக்க, அவர்களை எல்லாம் வெட்டிப் புறம் ஒதுக்கி விட்டு, கனிஷ்ட நிலையில் இருக்கும் – தமிழ் பேசத் தெரியாத – ஒருவரை வடக்கு மாகாண பிரதம செயலாளர் என்ற பொறுப்பான பதவிக்கு நியமித்திருக்கின்றது கோட்டா அரசு.

அடுத்து, யாழ் மாவட்ட அரச அதிபர் பதவியிலும் ஒரு தமிழரல்லாதவரை நியமிக்கும் திட்டம் வகுக்கப்படுவதாகக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டிருக்கின்றார். இது தொடர்பில் தமது ஆட்சேபனையைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு முற்கூட்டியே அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தக் கதி வடக்கு ஆளுநர் பதவிக்கும் நேரும் என்றும் சில வட்டாரங்கள் இப்போதே சந்தேகிக்கின்றன.

பல்வேறு காரணங்ளினால் நலிவுற்றிருக்கும் தமிழர் தேசத்தை இந்த நலிவைப் பயன்படுத்தி வீழ்த்தி உருட்டி, சிங்களப் பிரதேசமாக்கும் நயவஞ்சக நோக்குத் திட்டங்களின் அங்கங்கள் தான் இந்த நடவடிக்கைகள் எல்லாம்.

# மகளின் பிரேத பரிசோதனை அறிக்கையில் பாரிய சந்தேகம்!

## சிறுமியை இருட்டு அறையில் அடைத்தனர் எனத் தாய் தெரிவிப்பு

தனது மகளின் பிரேத பரிசோதனை அறிக்கையில் பாரிய சந்தேகம் நிலவுவதாகவும், மீண்டும் பிரேத பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனினுடைய இல்லத்தில் பணிக்கமர்த்தப்பட்டு தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்த சிறுமியின் தாய் ஆர்.ரஞ்சனி தெரிவித்தார்.

பிரேத பரிசோதனை அறிக்கையில் ஹிஷாலினி தனக்கு தானே தீ மூட்டிக் கொண்டார் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிவித்த ஆர். ரஞ்சனி, தனது மகள் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்ற போது அசைவும் இன்றியே காணப்பட்டார், கண்களைக் கூடத் திறக்கவில்லை. வாய்ப்பகுதியில் பட்டியொன்று கட்டப்பட்டிருந்தது. அவ்வாறிருக்கையில் அவர் எவ்வாறு 'நான் தான் தீமூட்டிக் கொண்டேன்' என்று கூறியிருப்பார் என்றும் கேள்வியெழுப்பினார்.

சிறுமியின் தாய் ஆர்.ரஞ்சனி மற்றும் தந்தை ஜீட்குமார் ஆகியோர் நேற்று திங்கட்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்தனர். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் -

மகள் பணிபுரிந்து வீட்டுக்குச் சென்று பார்த்த போது அங்கு ஒரு முஸ்லிம் பொலிஸ் அதிகாரியே காணப்பட்டார். அதே போன்று மகளின் பிரேத பரிசோதனை அறிக்கையும் முஸ்லிம் வைத்தியர் ஒருவராலேயே வழங்கப்பட்டுள்ளது. அதில் என்னுடைய மகள் 'நான் தான் தீமூட்டிக்கொண்டேன்' என்று கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் எமக்கு பாரிய சந்தேகம் நிலவுகிறது. எனவே மீண்டும் பிரேத பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்று நான் உரிய அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன். - என்றார்.

மேலும், எனது மகள் பணிபுரிந்த வீட்டில் அவர் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு முறையாக உணவு கூட வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு அவர் மின்விளக்கு அற்ற இருட்டு அறையிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளார். இருட்டில் தனித்திருக்க எனது மகள் மிகவும் அச்சப்படுவார். நான் சென்று அந்த அறையைப் பார்த்தேன். குறைந்தபட்சம் நாயொன்றுக்கு கூட அந்த அறையில் இருக்க முடியாது. அவ்வாறானதொரு அறையையே அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். சமையலறைக்கு வெளிப்புறத்திலேயே அந்த அறை அமைந்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடைய வீடு என்பதால் எனது மகள் பாதுகாப்பாக இருப்பார் என்றே நாம் நம்பினோம். ஆனால் எமது நம்பிக்கை பொய்யாகியுள்ளது. தற்போது என்னுடைய மகள் என்னுடனுமில்லை. உலகிலுமில்லை. அவரது மரணத்துக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும். தவறிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோருகின்றேன் - எனத் தெரிவித்துள்ளார்.

# ஸ்மாட்போல் சுன்னாகம் பகுதி கம்பத்தில் பொருத்தப்பட்டது அலைவரிசை சமிக்ஞை!

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,
ஜூலை 24



ஈ டொற் நிறுவனத்தால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொருத்தப்பட்ட ஸ்மாட்போல்களில் சுன்னாகம் பகுதியில் உள்ள கம்பத்தில் அலைக் கற்றை அலைவரிசைசமிக்கை பொருத்தப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஸ்மாட் போல் பொருத்தப்படும் சமயம் கம்பத்தை நாட்டும் நிறுவனத்திடம் இருந்து தொலைத் தொடர்பு நிறுவனங்கள் குத்தகை அடிப்படையில் இந்த சேவையை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டதோடு மேலும் பல சலுகைகளும் ஒரே கம்பத்தின் மூலம் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. இருந்தபோதும் இந்தக் கம்பங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைப் பரப்பிற்குள்ளும் இதே கம்பங்கள் நாட்டப்பட்ட சமயம் இந்த கம்பங்களில் 5ஜி அலைக் கற்று கொண்டு வரப்படும் எனத் தெரிவித்து கடும் எதிர்ப்பை தெரிவித்ததோடு தமிழ்த் தேசிய முன்னணி, ஈ.பி.டி.பி , சுதந்திரக் கட்சி என்பன இணைந்து ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டதோடு முன்னணி சார்பில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத் தாக்கல் செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் சுன்னாகம் பகுதியில் பிரதேச சபைக்கு முன்னால் உள்ள கம்பத்தில் இந்த சேவை பொருத்தியமை தொடர்பில் பிரதேச சபையின் தவிசாளர் தர்சனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது–

எமது சபை அலுவலகம் அமைந்துள்ள பிரதேசமும் அதனைச் சூழவுள்ள பகுதியிலும் தொலைத் தொடர்பு சேவைகள் பெரும் சிரமமாக இருப்பதால் இந்தக் கம்பத்தில் 4ஜி அலைக் கற்றை பொருத்துங்கள் என இந்த வட்டார உறுப்பினர் (சுதந்திரக் கட்சி) பிரேரணை முன்மொழிய சபை அங்கீகரித்து வழங்கிய தன் பெயரில் நிறுவனத்தால் பொருத்தப்பட்டதாக பதிலளித்தார்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 26



மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனின் சுவாமிஜி பூர்ணானந்தாவுடன் சிவநாயகம் தம்பதியினர். அவர்களின் இரண்டாவது மகன் இந்திரஜித்தும், மூன்றாவது மகன் செந்தில்குமரனும்.

*“ஆமாம். எங்கள் பத்திரிகையில் பிரசுரமான படம் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் செயலாளர் குமாரதாசனினுடையது அல்ல. அங்கு மதுரை மாநாட்டில் உரையாற்றியவர் இவர் அல்லர். பேசிய குமாரதாசனின் முகம் எனக்கு நன்கு நினைவில் உள்ளது.”* – என்றார் ஆசிரியர். அவரின் மேசையில் சர்சைக்குரிய தலைப்புச் செய்தி பிரசுரமான – எம்.ஜி. ஆர். மற்றும் குமாரதாசனின் படத்துடன் வெளியான செய்தி தாங்கிய – பத்திரிகை இருந்தது. அதைச் சுட்டிக் காட்டியபடி ஆசிரியர் பேசினார்.

*“இல்லை ஸேர். இவர்தான் கம்பன் கழகச் செயலாளர் குமாரதாசன். நானும் அவரும் சிறு வயதில் இருந்தே நண்பர்கள். எனக்கு அவரை நன்கு தெரியும். அதனால்தான் அந்தப் படத்தை பிரசுரிக்கக் கொடுத்தேன்.”* – என்று கூறியவாறு எனது பட அல்பத்தை விரித்தேன்.

ஆசிரியர் தமது மேசைக்கு முன்னால் இருந்த கதிரையில் என்னை அமரச் சொன்னார். நான் கையில் வைத்திருந்த அல்பத்தை வாங்கிப் பிரித்தார். எனது கம்பன் கழக நிகழ்வுப் படங்கள் பல அதில் இருந்தன. அவற்றை நோட்டம் விட்ட ஆசிரியர், திடீரென ஒருவரை அடையாளம் காட்டினார்.

*“இவர் தான் நீர் குறிப்பிடும் குமாரதாசன். ஆனால் அன்று கூட்டத்தில் பேசியவர் அவர் அல்லர். இதோ அவருக்குப் பக்கத்தில் நிற்கும் இந்த இளைஞர்தான் பேசியவர்”* – என்றார் ஆசிரியர்.

எனக்கு விடயம் விளங்கிவிட்டது.

*“அப்படி என்றால் அன்று கூட்டத்தில் பேசியவர் குமாரதாசன் அல்லர். கம்பன் கழகத்தின் அமைப்பாளர் ஜெயராஜ்தான். அவர்தான் எங்கள் மத்தியில் ஓரளவு தேர்ந்த பேச்சாளர்”* – என்றேன் நான்.

ஆசிரியருக்கும் எல்லாம் புரிந்து விட்டது. ஆனால் ஜெயராஜுக்குப் பதிலாக குமாரதாசனின் பெயர் ஏன் அறிவிக்கப்பட்டது, அவர்கள் ஏன் ஆள் மாறிப் பேசினார்கள் என்பது ஆசிரியருக்கும் விளங்கவில்லை.

கம்பன் கழக இளைஞர்களுடன் தொடர்பு கொண்டு பேசுவதற்கு தொலைபேசி இலக்கம் ஏதும் உண்டா என்று கேட்டார் ஆசிரியர். நான் இல்லை என்றேன். எனினும் அவர்களின் முகவரியைக் கொடுத்தேன்.

அதையடுத்து தான் ஜெயராஜ் தரப்புடன் ஆசிரியர் கடிதத்தில் தொடர்புகளைப் பேணினார். அதன் பின்னர்தான் தமிழாராய்ச்சி மாநாடு தொடர்பான தனது தொடர் கட்டுரையை ‘மாமதுரைச் சீமையிலே தேமதுரத் தமிழோசை’ என்ற தலைப்பில் வாராந்தம் சிந்தாமணியில் தாம் வரையவிருக்கின்றார் என்பது பற்றிய அறிவிப்பை ஆசிரியர் விடுத்தார்.

“மதுரை மாநாட்டில் பேசியவர் குமாரதாசனா? அங்கே என்ன பேசப்பட்டது? யார் பேசினார்கள்? அதற்கு எம்.ஜி.ஆர். சொன்ன பதில் என்ன? அங்கு உண்மையில் நடந்தவை யாவை? இவையெல்லாம் இந்தக் கட்டுரைத் தொடரில் விவரமாக வெளி வரும்” என்று ‘மாமதுரைச் சீமையிலே தேமதுரத் தமிழோசை’ கட்டுரைத் தொடர் பற்றிய முன்னோட்ட அறிவிப்பைப் பரபரப்பாக வெளியிட்டார் ஆசிரியர்.

அன்று என் அல்பத்தை வாங்கி புரட்டி எஸ்.டி. எஸ். ஐயா அதிலிருந்த ஜெயராஜின் ஓரிரு படங்களை வாங்கி கறுப்பு – வெள்ளைப் புகைப்படமாக அலுவலகத்தில் பிரதி பண்ணி சேமித்துக் கொண்டார்.

அப்போது அவர் கூறிய கருத்து சொல்லுக்குச் சொல் எனக்கு நினைவில் இல்லாவிட்டாலும், அவர் மெச்சிக் குறிப்பிட்ட விடயங்கள் என் நினைவில் பசுமையாக உண்டு.

*“யாழ் இந்துக் கல்லூரி தயாரித்த மற்றொரு ஆளுமையுள்ள இளைஞன். இலக்கியப் பேச்சில் ஒரு காலத்தில் கி.வா.ஜெகந்நாதனை விஞ்சுவான். அவனிடம் இலக்கிய நேர்மை, உள்ளத்தில் கள்ளம் இல்லா வெளிப்படையான பேச்சு இருப்பதைக் கண்டேன். மாநாட்டில் இருந்த பலரும் அதை அன்று அடையாளம் கண்டு கொண்டனர்”* – என்ற சாரப்பட ஆசிரியர் குறிப்பிட்டார்.

அன்றே ஆசிரியர் சிவநாயகத்தின் மனதில் ஒரு மகனாக ஜெயராஜ் அமர்ந்துகொண்டார் என்பதை நான் உணர்ந்தேன். அவர்கள் இருவருக்கும் இடையிலான அந்தக் கள்ளமில்லா பரிவை, ஒருவரின் திறமையை மற்றவர் விதந்துரைக்கும் நேர்மையை பின்னர் பல சமயங்களில் நான் நேரில் அவதானித்தேன்.

அன்று ஆசிரியரின் அறையில் நடைபெற்ற உரையாடல் எனக்கு பெரும் திருப்தி – மூன்று காரணங்களால்.

ஒன்று – பத்திரிகையில் குமாரதாசனின் படம் பிரசுரமானமை என் தவறால் அல்ல, அதில் நான் ஏதும் தவறு இழைக்கவில்லை என்பதை ஆசிரியரும் ஏனைய ஆசிரிய பீடத்தினரும் உணர்ந்து கொண்டு விட்டனர். என் மீது சக சீனியர் ரிப்போர்ட்டர்கள் சுமத்திய வாதம் அடிபட்டுப் போய்விட்டது.

அடுத்தது – என் நெருங்கிய நண்பன் ஜெயராஜை நன்கு திறமை உள்ளவர், எதிர்காலத்தில் மதிப்புக்குரிய பெரிய பேச்சாளராக வருவார் என்று என் ஆசிரியர்கள் அடையாளம் கண்டு கொண்டமை. இத்தகைய ஒருவனை (அப்போதெல்லாம் நண்பர் ஜெயராஜ் எனக்கு ‘ஒருவன்’தான்; இப்போது ‘அவர்’ எங்கோ! அவர் மரியாதை எங்கோ, அது உச்சம்! நான் ‘ஒருவன்’ என்று உரிமையுடன் உள்ளத்தில் குறிப்பிட முடியுமே தவிர, வெளியில் கூற முடியாது. அவரது உயர் நிலைக்கு ‘அவர்’ என்றுதான் நான் விளிக்கலாம். அதேநேரம் என் மீதான உரிமை, நட்பு கருதி என்னை ‘அவன்’ என்றுதான் அவர் அழைக்க வேண்டும், அழைக்க முடியும்.) நண்பனாகப் பெற்றமையால் என் பத்திரிகை ஆசிரியர் மத்தியிலும், ஆசிரிய பீடத்திலும் என் மதிப்பு சற்று உயர்ந்து விட்டதாக நான் உணர்ந்தேன்.

மூன்றாவதுதான் முக்கியமானது. ‘யாழ் இந்துக் கல்லூரி தயாரித்த மற்றொரு ஆளுமையுள்ள இளைஞன்’ என்று ஆசிரியர் குறிப்பிட்ட வாசகம். நற்சான்றுப் பத்திரம். இது நண்பன் ஜெயராஜுக்கு வழங்கப்பட்டது. ஆயினும் அதில் ஒரு விடயம் தொக்கி நின்றது. ஒன்று – யாழ் இந்துக் கல்லூரி என நான் படித்த பாடசாலைக்குக் கிடைத்த சிறப்பு. அதையும் தாண்டி ‘அந்தக் கல்லூரி தயாரித்த மற்றொரு ஆளுமையுள்ள இளைஞன்’ என்று விளித்துக் குறிப்பிட்ட ஆசிரியர் அதன் மூலம் இன்னொருவருக்கு அடுத்தவராக அவரைச் சுட்டுகின்றார். அவர் சுட்டும் அந்த முதல் இளைஞர் நானாக இருப்பேன் என்று எனக்கு நானே அர்த்தம் கற்பித்து புளகாங்கிதம் அடைந்து கொண்டேன். ஏற்கனவே நான் முதன் முதலில் பத்திரிகைக்கு எழுதிய செய்தியைப் பார்த்து துணை ஆசிரியர் இரத்தினசிங்கம் உதவி ஆசிரியர்கள் மேசையில் உள்ளோரிடம் *“பாருங்கள் இருவது வயது இளைஞனின் எழுத்தை. யாழ் இந்துக் கல்லூரி தமிழை”* – என்று கூறியமையை நான் அறிந்திருந்தேன். அது பற்றி ஏற்கனவே இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அவர் மூலமாகத்தான் இந்த யாழ் இந்துக் கல்லூரி தமிழ் பற்றிய பெருமை ஆசிரியர் சிவநாயகத்தின் மனதிலும் பதிவாகியிருக்கும் என எண்ணினேன்.

எனக்கு நானே அந்த அர்த்தத்தைக் கற்பித்துக் கொண்டு, அந்த மனத் திருப்தியில் செய்தியாளர்களின் மேசைக்குத் திரும்பினேன்.

நான் ஆசிரியரிடம் என்ன மங்கலம் வாங்கிக் கொண்டு வருவேன் என்பதை அறிய ஆவலுடன் காத்திருந்த என் சீனியர் ரிப்போர்ட்டர்களுக்கு, மலர்ந்த முகத்துடன் நான் வந்தமை ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. அவர்களை மேலும் உசுப்பேத்த விரும்பிய நான் இரண்டு விடயங்களை சேர்த்து அவிழ்த்து விட்டேன்.

*“நான் போட்ட படம், கலாமோகன் எழுதிய செய்தி எல்லாம் அப்படியே சரி என்று ஆசிரியர் பாராட்டினார். மதுரை மாநாட்டில் எம்.ஜி.ஆரின் மனதைத் தொடும் வகையில் பேசியவர் என் நண்பர் என்று அறிந்து ஆசிரியருக்கு மிக்க மகிழ்ச்சி. என்னைப்போல் அவனின் (என் நண்பன் என்பதை அழுத்திக் காட்ட அப்படி ‘அவன்’ என்று கூறினேன்.) தமிழும் ரொம்ப உயர்வானது, பாராட்டத்தக்கது என்றெல்லாம் ஆசிரியர் மெச்சினார்”* – என்று ஆசிரியருடன் நடந்த சம்பாஷணைக்கு உப்பு, புளி, காரம் எல்லாம் சேர்த்து நான் அடித்து விட்டேன். இவர்கள் யாருக்கும் ஆசிரியரிடம் தனியாகப் போய் நான் சொன்னதை சரியா, கயிறா என்பதை பற்றிப் பேச தைரியமே இருக்காது என்ற உண்மையை புரிந்து வைத்திருந்ததால்.

நண்பன் கலாமோகனுக்கும் தன் செய்தி – தனது அறிக்கையிடல் – வரிக்குவரி சரி என்ற அளவில் மிகுந்த மனத் திருப்தி.

இனி சிவநாயகம் ஐயா ‘மாமதுரைச் சீமையிலே தேமதுரத் தமிழோசை’ கட்டுரைத் தொடரை எழுதிய போது பக்கத்தில் இருந்து பார்த்த எனக்கு அது தொடர்பில் ஏற்பட்ட ஆச்சரியம் பற்றி விவரித்து, அவருக்கும் கம்பன் கழகத்துக்குமான ஊடாட்டத்தில் நான் அவதானித்த சில முக்கிய தகவல்களையும் தருவேன்.

(வளரும்....)



இந்து சமய விவகார அமைச்சின் அதிகாரி மாணிக்கவாசகர், பின்னாளில் தமிழக அமைச்சரான திருநாவுக்கரசு ஆகியோருடன் எஸ்.டி.எஸ். சிவநாயகம்.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 08 | விஞ்ஞானம் | அலகு 09

## மனிதனின் உடற்தொகுதி

நேற்றைய தொடர்ச்சி


**9.2 மனிதனின் நரம்புத் தொகுதி**

* உடலின் அக, புற மாற்றங்களிற்கு புலனங்கம், விளைவுகாட்டிகள் ஒருங்கிணைந்து செயற்படுதல் இயைபாக்கம் எனப்படும்.
    * உ+ம் : கிரிக்கெட் விளையாடும் போது பந்தை அடித்தல்
      பார்த்தல் - கண் } இவற்றிடையான இணைப்பு
      அடித்தல் - கை } **இயைபாக்கம்** ஆகும்.
      அசைவுகள் - கால், கழுத்து
* இயைபாக்கத்தில் பின்வருவன தொடர்புறும்
    * தூண்டல் - சூழலில் ஏற்படும் மாற்றம்
    * துலங்கல் - சூழலின் மாற்றத்திற்கு உடல் காட்டும் மாற்றம்
    * வாங்கி - சூழலில் ஏற்படும் மாற்றத்தை வாங்குபவை உணர்பவை.
    * விளைவுகாட்டி - துலங்களை வெளிக்காட்டுபவை
* வாங்கியாக **புலனங்கங்கள்** (கண், காது, மூக்கு, நாக்கு, தோல்) தொழிற்படுகின்றன.
* விளைவுகாட்டியாக **தசைகள்** (கை, கால், கழுத்து தசைகள்), சுரப்பிகள் (உமிழ்நீர்ச் சுரப்பி தொழிற்படுகின்றன.
    * உ+ம் 1) கிரிக்கெட் விளையாடும் போது பந்தை அடித்தல்
        * தூண்டல் - பந்தை காணல்
        * துலங்கல் - பந்தை அடித்தல்
        * வாங்கி - கண்
        * விளைவுகாட்டி - கை, கால், கழுத்து தசைகள்
    * உ+ம் 2) : ருசியான உணவைக்கண்டதும் உமிழ்நீர் சுரத்தல்
        * தூண்டல் - உணவைக் காணல்
        * துலங்கல் - உமிழ்நீர் சுரத்தல்
        * வாங்கி - கண்
        * விளைவுகாட்டி - உமிழ்நீர் சுரப்பி
    * உ+ம் 3) : கை தட்டும் ஒலிக்கு திரும்பிப் பார்த்தல்
        * தூண்டல் - கை தட்டும் ஒலி
        * துலங்கல் - திரும்பிப் பார்த்தல்
        * வாங்கி - காது
        * விளைவுகாட்டி - கழுத்து தசைகள்

**இயைபாக்கம்**


1. புலனங்கங்கள் எவை? ..........................................
2. தூண்டலை உணரும் புலனுறுப்புக்களின் சிறப்பு பெயர் யாது? ..........................
3. விளைவுக் காட்டிகளாகத் தொழிற்படுவன எவை? ..........................
4. இயைபாக்கம் (Coordination) என்றால் என்ன? ..........................
5. மனித உடலிலே இயைபாக்கத்தை மேற்கொள்வதில் பங்களிப்பு செய்பவை எவை? ..........................................
6. நரம்பியைபாக்கம் என்றால் என்ன? ..........................................
..........................................
7. இரசாயன இயைபாக்கம் நரம்பின்றிய இயைபாக்கம் என்றால் என்ன?
..........................................

**நரம்பு இயைபாக்கம்**




**மையநரம்புத் தொகுதி (Central nervous system)**

1. மைய நரம்புத் தொகுதியில் அடங்குவன எவை? ..........................
2. அவற்றை பாதுகாக்க என்புகள் காணப்படுகின்றன. பின்வரும் என்புகள் எவற்றைச் சூழ காணப்படும் என குறிப்பிடுக.
    1. மண்டையோடு : ..........................
    2. முள்ளந்தண்டென்புக் கோர்வை : ..........................
3. மைய நரம்புத் தொகுதியில் காணப்படும் உறுப்புக்களை சூழ காணப்படும் விசேட மென்சவ்வு எது? ..........................
4. மேற்படி மென்சவ்விற்கிடையே காணப்படும் விசேடமான பாய்மம் எது?
..........................................
5. அப்பாய்மத்தின் பிரதான தொழில்கள் 3 குறிப்பிடுக? ..........................
6. மைய நரம்புத் தொகுதியின் பகுதிகளை குறிக்க.




1 - ..........................
2 - ..........................
3 - ..........................
4 - ..........................

7. பின்வரும் மைய நரம்புத் தொகுதியின் பகுதிகளின் பிரதான தொழில்களை சரியாக குறிக்கும் எழுத்துக்களை அடைப்பினுள் எழுதுக.

1. மூளையம் ( ) A - உடற் சமநிலையைப் பேணுதல், அசைவு மற்றும் அசைவிற்கான தசை இயைபாக்கம்.
2. மூளி ( ) B - இதயத்துடிப்புவீதம், சுவாசவீதம் போன்ற இச்சையில் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தல்
3. நீள்வளைய மையவிழையம் ( ) C - உடலுக்கும் மூளைக்கும் இடையில் தகவல்களை ஊடுகடத்தல்.
4. முண்ணாண் ( ) D - ஞாபகம், சிந்தனை போன்ற உயர் உள மனிதச் செயற்பாடுகளைஆளுதல், தூண்டல்களைஇனங்காணல், இச்சைவழித் தசைச் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துதல்

சுற்றயல் நரம்புத் தொகுதி **(Peripheral nervous system)**

1. மூளையில் இருந்தும் முண்ணாணிலிருந்தும் ஆரம்பித்து உடல் முழுவதும் பரம்பியிருக்கும் நரம்புகள் எவ்வாறு அழைக்கப்படும்? ..........................
2. மூளையில் இருந்து பரம்பிச் செல்லும் நரம்புகள் எவை? ..........................
3. முண்ணானில் இருந்து பரம்பிச் செல்லும் நரம்புகள் எவை? ..........................
4. மனிதனின் சுற்றயல் நரம்புத் தொகுதியை குறித்துக் காட்டுக.





1 - ..........................
2 - ..........................

5. சுற்றயல் நரம்புத் தொகுதியில் காணப்படும் பின்வரும் நரம்புகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக
    1. மண்டையோட்டு நரம்பு : ..............
    2. முண்ணான் நரம்புகள் : ..............
6. சுற்றயல் நரம்புத் தொகுதியின் தொழில்கள் 2 குறிப்பிடுக? ..........................
7. நரம்புக் கணத்தாக்கம் (Impulse) என்றால் என்ன?
..........................................
8. நரம்புத் தொகுதியின் பாதுகாப்பிற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் 5 குறிப்பிடுக. ..........................

**9.3 மனிதனின் தோல்**

1. உடலில் காணப்படும் மிகப் பெரிய அங்கம் எது? ..........................
2. வளர்ந்த மனிதர் ஒருவரின் தோலின் அண்ணளவான திணிவும், தடிப்பும் எவ்வளவு? ..........................
3. தோலின் பிரதான இரண்டு பகுதிகளும் (உரு **X, Y** எனக்காட்டப்பட்டவை) எவை? ..........................
4. பின்வரும் படத்தில் காட்டப்பட்டுள்ள **A - D** வரையான தோலின் பகுதிகளை குறிக்க.

**A** - .................. **B** - ..................
**C** - .................. **D**- ..................




5. தோலின் புறத்தே காணப்படும் பகுதி எது? ..........................
6. மேற்றோலில் உயிருள்ள, உயிரற்ற கலங்களைக் கொண்ட கலப்படைகளை குறிப்பிடுக.
    1 - வெளிப்புறமாகக் காணப்படும் நிலையான கலப்படை : ..............
    2 - உட்புறமாகக் காணப்படும் நிலையான கலப்படை : ..............
7. மேற்றோல் கலங்களில் காணப்படும் நிறப்பொருள் எது? ..........................
8. அதன் தொழில் யாது? ..........................
9. உட்தோலில் காணப்படும் அமைப்புக்கள் யாவை? ..........................
10. கொழுப்பு எப்பகுதியில் காணப்படும்? ..........................
11. மனித தோலின் தொழில்கள் 05 குறிப்பிடுக? ..........................
..........................................
..........................................
..........................................
..........................................
..........................................
12. புறத்தோலிலுள்ள புறக்கலப் படையின் தொழில் யாது?
..........................................
13. நெய்ச் சுரப்பிகளினால் சுரக்கப்படும் சுரப்புகளினால் ஏற்படும் இயற்கையான பாதுகாப்புப் பொறிமுறை யாது?
..........................................
14. மனித தோல் எவ்வாறு உடல் வெப்ப நிலையைச் சீராக்குகிறது?
..........................................
..........................................
15. உட்தோலில் எத்தூண்டல்களை வாங்கக்கூடிய நரம்பு முடிவிடங்கள் காணப்படும்? ..........................

தோலை ஆரோக்கியமாகப் பேணுவதற்கு மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகள்

1. தோலை ஆரோக்கியமாகப் பேணுவதற்கு மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகள் நான்கு குறிப்பிடுக?
..........................................
..........................................
..........................................
..........................................
2. தோலின் ஆரோக்கியத்திற்கு அவசியமான விற்றமின்கள் இரண்டு குறிப்பிடுக?
..........................................
3. மேற்படி விற்றமின்கள் எவற்றில் அதிகளவு உள்ளன? ..........................
..........................................
4. புகைத்தலாலும், மதுபானம் அருந்துவதாலும் தோலிற்கு ஏற்படும் பாதிப்பை சுருக்கமாக குறிப்பிடுக.
..........................................
..........................................
..........................................
5. தோலை பாதுகாக்க கூடிய முறைகள் 4 தருக. ..........................
..........................................
..........................................
..........................................
..........................................
6. தோலில் தோன்றும் நோய்கள் 4 குறிப்பிடுக? ..........................
..........................................
..........................................
..........................................

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**

# திருகோணமலையில் மணல் அகழ்வு சுமந்திரன் எம்.பி. நேரடி களவிஜயம்



திருகோணமலை வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நாதன் ஓடையில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இது தொடர்பான கள நிலைமைகளை ஆராய்வதற் காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இராச மாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் கடந்த ஞாயிற் றுக்கிழமை காலை அப்பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அப்பகுதியைப் பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது அப்பகுதி மக்களிடம் பிரச்சினைகளை யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டறிந்துள்ளனர்.

இதன்போது வெருகல் பகுதியிலுள்ள விவசாயச் சங்கங்கள், சமூக அமைப்புக்கள், வெருகல் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் கூட்டமைப்பின் உறுப்பி னர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மணல் அகழ்வால் வெருகல் பகுதியில் ஏற்படப் போகும் பாதிப்புக்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப் பினர்களிடம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## மேலும் ஒருதொகுதி பைஸர் தடுப்பூசி நாட்டை வந்தடைவு

நாட்டிற்கு மேலும் ஒரு தொகுதி பைஸர் தடுப்பூசிகள் கொண்டுவரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, குறித்த தடுப்பூசிகள் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன எனத் தெரி விக்கப்படுகிறது.

பைஸர் தடுப்பூசிகள் ஆரம்பத்தில் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை முதல் டோஸாகப் பெற்றவர்களுக்கு 2 ஆவது டோஸாக வழங்கப்பட்டது.

இருப்பினும் மேலும் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் விரைவில் பெறப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் விபத்து; ஒருவர் படுகாயமடைவு

மட்டக்களப்பு, ஜுலை 27

மட்டக்களப்பு - மண்கூண்டு கோபுர சந்தியில் இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதியதில் ஏற்பட்ட விபத்தில், ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் ஒரு கார் பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் காயமடைந் தவர், மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸார் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டு வருகின் றனர்.

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 08 | விஞ்ஞானம் | அலகு 09

### மனிதனின் உடற்தொகுதி - விடைகள்

**9.1 மனிதனின் கழிவகற்றல் அங்கமும் கழிவுப் பதார்த்தங்களும்**

1. காபனீரொட்சைட்டு, நீர், சக்தி
2. நீர், சக்தி
3. காபனீரொட்சைட்டு
4. உயிர் இரசாயனத் தொழிற்பாடுகளின் விளைவாகத் தோன்றும் உடலுக்குப் பயனற்ற பதார்த்தங்கள் அனுசேபக் கழிவுப் பதார்த்தங்கள் எனப்படும்.
5. உயிர்க்கலங்களினுள் நடைபெறும் இரசாயனத் தொழிற்பாடுகளின் மூலம் உண்டாகும் கழிவுப் பதார்த்தங்கள் உடலிலிருந்து வெளியேற்றப்படும் செயன்முறை கழிவகற்றல் எனப்படும்.
6. கழிவகற்றலுக்கென உடலில் சிறப்பாக ஒழுங்கமைந்துள்ள உடற்தொகுதி கழிவகற்றும் தொகுதி ஆகும்.
7. 1 - காபனீரொட்சைட்டு, நீர்   2 - சிறுநீராக   3 - தோல்
8. மலம்
9. உணவுச்சமிபாட்டுத் தொகுதியினுள் நடைபெறும் இரசாயன தொழிற்பாடுகளின் மூலம் உற்பத்தியாகும் பதார்த்தங்கள் அல்ல என்பதால்

**சிறுநீரகத் தொகுதி**

1. சிறுநீரகத் தொகுதி
2. சிறுநீரகங்கள், சிறுநீர்க்காண், சிறுநீர்ப்பை, சிறுநீர்வழி
3. 1 - தொகுதிப்பெருநாடி 2 - வலது சிறுநீரகம் 3- சிறுநீரகநாளம் 4 - சிறுநீர்க்கான் 5 - சிறுநீர்ப்பை 6 - சிறுநீர்வழி
4. 1 - முள்ளந்தண்டென்புக் கோர்வையின் 2 - ஈரலின் அமைவு 3 - அவரை வித்து 4 - சிறுநீரக நாடி 5 - சிறுநீரக நாளம்
5. A - மையவிழையம் B - சிறுநீரக நாடி C - சிறுநீரக நாளம் D - சிறுநீரக இடுப்பு E -சிறுநீர்க்கான் F - மேற்பட்டை
6. மேற்பட்டை, மையவிழையம், சிறுநீரக இடுப்பு
7. அதிகளவிலான குருதி மயிர்த்துளைக் குழாய்களைக் கொண்டிருப்பதனால்
8. சிறுநீரகக் கூம்பகங்கள்
9. சிறுநீரக இடுப்புடன்
10. சிறுநீர்க்கானில்
11. சிறுநீரக நாடிகள் மூலம்
12. சிறுநீரகத்தினுள்
13. சிறுநீரக நாடிகள் மூலம் கொண்டுவரப்படும் கழிவுப்பதார்த்தங்கள் அடங்கிய குருதி சிறுநீரகத்தினுள் வடிகட்டலுக்கு உட்படும் கழிவுப்பதார்த்தங்கள் வேறாகிச் சிறுநீர்க்கானூடாகச் சிறுநீர்ப்பைக்கு கொண்டுவரப்பட்டுத் தற்காலிகமாக சேமிக்கப்படும் கழிவுப்பதார்த்தங்களுடன் கூடிய பாய்மம் சிறுநீர் எனப்படும்
14. சிறுநீரக நாடிகள்→ சிறுநீரகம் →சிறுநீர்க்கான் →சிறுநீர்ப்பை→சிறுநீர்வழி
15. நீர், யூரியா, யூரிக்கமிலம், உப்புக்கள்( அதிகளவு சோடியம் குளோரைட்டு)
16. 1 - சிறுநீர்ப்பை, 2 - சிறுநீர், 3 - சோடியம் குளோரைட்டு, 4 - சிறுநீர்வழி
17. சிறுநீரில் அடங்கியுள்ள கூறுகளின் நூளுற்றுவீதம், சிறுநீரின் நிறம்

**சிறுநீரகத்தில் ஏற்படும் கோளாறுகள்**

1. சிறுநீரகத்தில் கற்கள் உண்டாதல், சிறுநீரக செயலிலப்பு, சிறுநீரகம் தொற்றுக்கு உள்ளாகுதல்.
2. கல்சியம் ஒட்சலேற்றுப் போன்ற உப்புக்கள் சிறுநீரகங்களில் படிந்து பளிங்குகள் (பளிங்காக்கம்) உருவாவதால்
3. சிறுநீரகங்களில் கல்சியம் ஒட்சலேற்றுப் போன்ற உப்புக்கள் படிந்து உருவாகும் பளிங்குகள்
4. 1 - அருந்தாமை, 2 - அடிக்கடி, 3 - தாமதப்படுத்தல்
5. சிறுநீரகத்தின் செயற்பாடுகள் பாதிப்படைந்து, சிறுநீரகங்கள் சேதமடைதல் சிறுநீரகச் செயலிழப்பு எனப்படும்.
6. 1 - பாரஉலோகங்களும், இரசாயனப் பதார்த்தங்களும் 2 - நீரிழிவு 3 - நீண்ட காலமாக 4 - புகைத்தலும், மதுபானம் அருந்தலும்.
7. நுண்ணங்கிகள் மூலம் சிறுநீர்வழியில் தொற்று ஏற்பட்டு சிறுநீரகங்கள் பாதிப்படைதல்
8. 1 - போதியளவு, 2 - மட்டுப்படுத்தல், 3 - தவிர்த்தல், 4 - சிறுநீரகச் செயலிழப்பு, 5 - நியமிக்கப்பட்ட, 6 - சுத்தமாக

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**

## 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு செப்டெம்பருக்கு முதல் தடுப்பூசி

### அமைச்சர் பந்துல குணவர்தன உறுதி



30 வயதுக்கு மேற்பட்ட இலங்கை யர்கள் அனைவருக்கும் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் தடுப்பூசி செலுத் தப்படும் என்று அமைச்சர் பந்துல குண வர்தன தெரிவித்துள்ளார்.

அந்தத் தடுப்பூசிக்குப் பிறகு நாடு மீண் டும் திறக்கப்படும் என்று வர்த்தக அமைச் சர் மேலும் கூறியுள்ளார்.

புலத்சிங்கள என்ற இடத்தில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அடுத்த வாரம் பாட சாலைகளை மீண்டும் திறக்க திட்டமிடப் பட்டுள்ளதால், உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடி முகக்கவசங்களின் விலையை மேலும் குறைக்க முயற்சிப் பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இப்போது ஒரு முகக்கவசம் 14 ரூபா வுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## மஹிந்தவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்ட பெண் அதிரடியாக நீக்கம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக அண் மையில் நியமிக்கப்பட்ட கௌஷி வெடி காரச்சி அந்தப் பதவியில் இருந்து நீக் கப்பட்டுள்ளார் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அவரது நியமனக் கடிதம் பிரதமர் அலு வலகம் மீள கோரியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. இந்த நியமனம் தொடர்பாக பிரதமர் ஊழியர்களிடையே சரியான ஒருங்கிணைப்பு மற்றும் புரிதல் இல்லாததால் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு அவர் பிரதமரின் ஒருங்கிணைப்பு அதி காரியாக நியமிக்கப்பட்டார். குறித்த நியம னம் தொடர்பில் பிரதமர் ஊழியர்கள் வருத்தம் வெளியிட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கௌஷி வெடிக்காரச்சியின் கணவர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தின் தலைவரும், இயக்குநருமான தமித விக்ரமசிங்க எனத் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆபத்தான உபகரணங்களை சிறுவர்கள் பயன்படுத்த தடை

வாகன சில்லுகளை மாற்றவும், உண வகங்களில் சமைக்கவும், நில ஓடுகளை வெட்டவும் அல்லது ஆபத்தான உபக ரணங்களைக் கையாளவும் 16 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களைப் பயன் படுத்துவது புதிய விதிமுறைகளின் கீழ் தடை செய்யப்பட உள்ளதாக தொழில் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நோக்கத்துக்காக, தொழில் அமைச்சகம் 16 முதல் 18 வரை சிறுவர் களுக்கு அபாயகரமானதாகக் கருதப்படும் தொழில்களின் பட்டியலை விரிவுபடுத் தும் என்று தொழில் ஆணையாளர் பிர பாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

குறித்த விதிமுறைகளை சட்ட வரை ஞர் மதிப்பாய்வு செய்து வருகிறார். இந்த நிலையில் முன்மொழியப்பட்ட விதிமுறை களின் கீழ், குழந்தைகளை மாணிக்கம் மற்றும் மணல் சுரங்கம், ஆழ்கடல் மீன் பிடித்தல், இரும்புகளை வார்ப்பது மற் றும் இரசாயனங்களைப் பயன்படுத்தும் தொழில்களில் பயன்படுத்த முடியாது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணைக் குழுவின் அதிகாரி ஒருவர் வழங்கியுள்ள தகவல்படி, சிறுவர்களுக்கு அபாயகர மான பட்டியலை விரிவாக்குவதன் மூலம், 16 முதல் 18 வயதுக்குட்பட்ட ஒரு சிறு வனை வீட்டு உதவியாளராகப் பயன் படுத்தினாலும் கூட அபாயகரமான வேலைகளில் அவர்களைப் பயன்படுத்த முடியாது.

உதாரணமாக, ஒரு சிறுவன் ஒரு குடியிருப்பில் இருந்தாலும் கூட அவரை வாகனச் சில்லை மாற்ற பயன்படுத்த முடியாது என்று அந்த அதிகாரி கூறியுள் ளார்.

விருந்தகங்கள் மற்றும் உணவகங் களில் வணிக சமையலறைகளில் சமைப் பதற்கு சிறுவர்களைப் பயன்படுத்த முடி யாது. இதற்கிடையில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, 15 வயதுக்குட் பட்டவர்கள் தொழில் செய்யும் வீடுகளில் சோதனைகளை மேற்கொள்ள ஒரு குழுவை நியமிக்க உள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**அங்கம் 79**



திம்புப் பேச்சு மேசையில்

**242. இவர்கள் இருவரும் (பிரபாகரனும் உமாமகேஸ்வரனும்) முரண்பாடான போக்குக் கொண்டவர்களாக இல்லையா?**

நான் கூட பின்னாளில் லண்டனில் பாலசிங்கத்தை சந்தித்த காலங்களில் கேட்டேன். 80, 81காலங்களில் பாலசிங்கம், பிரபாகரனுக்கும் உமா மகேஸ்வரனுக்கும் இடையில் இருந்த பூசல்களைத் தீர்த்து வைக்க முயற்சிகள் எடுத்து, அவை சரிவராமல் போகவே பிரபாகரனோடு இணைந்து கொண்டார். நான் அறிந்த வரையில் உமாமகேஸ்வரன் அவ்வளவு இடதுசாரிக் கொள்கைகளில் இல்லாவிட்டாலும் சந்ததியாரும் அவரது நண்பர்களும்தீவிரமான மக்கள்போராட்டத்தையும் முன்னெடுக்க விரும்பியிருந்தார்கள். பாலசிங்கத்தின் இடதுசாரிப் போக்குக்கு அவர்கள் சாதகமாகப் போயிருந்திருப்பார்கள் என்று சொல்லி, சோஸலிஸம் எவ்வளவு போகிறது, ஆயுதக் கொள்வனவு எப்படி என்றும் கேட்டேன்.

*“யாழ்ப்பாணத் தமிழனை எப்படித் தட்டி எழுப்பலாம்? படித்தவர்களும் புத்திஜீவிகளுமே கும்பகர்ணர்களாகத் தூங்கும் போது யாழ்ப்பாணத்தில் ஒரு விழிப்புணர்வை செயல்படுத்துவது எப்படி? விடுதலைப் புலிகள் வன்முறைகள் செய்ய அவர்கள் போற்றுகிறார்கள் அல்லது பேசாமலிருக்கிறார்கள். ஆகவே சமூக முரண்பாட்டுகளையும் அதன் காரணங்களையும்ஆராயும்முரண்பாட்டு முறையிலிருந்து (Conflict Model), ஒன்றுக்கொன்று தொடர்பாக இயங்கும் கட்டமைப்பைகொண்டுள்ளஅணுகுமுறையே (Consensus Model) தான் பிரபாகரனோடும் விடுதலைப் புலிகளோடும் கடைப்பிடிக்கிறேன்.”* – என்றார்

அந்த ஆயுதப் போராட்டம் என்பதை

இருந்தது என்பவற்றின் வரலாற்று பதிவுகளை ஒட்டி எனது விமர்சனம் சரியாக இல்லாமல் போகலாம்.

ஆயினும் என்னளவில் லண்டன் காலத்திலிருந்தே என்னுடன் நெருங்கிப் பழகிய ஒருவர். ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பத்மநாபாவும் தோழர்களும் தீர்த்து கட்டப்பட்ட மற்றும் அது போன்ற தனிப் படுகொலைகளை எந்தளவில் தெரிந்திருந்தார் அல்லது எப்படி நியாயப்படுத்தினார் என்பவை எல்லாம் விளங்காமலே இருந்தன.

நான் பிரபாகரனை அவர் விடுதலை போராட்டத்தை தொடங்கிய நாள்களிலிருந்தே அவர் இராணுவ வழிமுறைக்கு அப்பால், இடது சாரி, வலது சாரி, ரஷ்யா. சீன சார்பு என்ற அரசியல் சித்தாத்தங்களில் அக்கறை பட்டதே இல்லை என்பதை அறிவேன். அவரது ஒழுங்கை நிலை



தமிழ் இயக்கத் தலைவைகள் ஒன்றாக

மாற்றமுடியாது. ஆகவே அதற்குத் துணையாக எனது அரசியல் அனுசரணையை தருகிறேன் என்பது அவரது வாதம். யாழ்ப்பாணத்தவர்கள் முதலில் மாறவேண்டும் என்றார்.

**243. இப்படியான முரண்பாட்டு நிலைகளிலேதான், பாலசிங்கம் 'ஒஸ்லோ' தீர்மானம் வரை வந்தார்?**

அப்படியான அபிப்பிராயம்தான் எனக்கு உண்டு. ஆனால் இது எனது சுய விமர்சனம் மட்டுமே. இந்திய ஒப்பந்தம் நடந்து, இந்தியப் படைகளுடன் விடுதலைப் புலிகளின் மோதல்கள் தொடங்கிய, காலப் பகுதிகள் மட்டுமே நான் அவருடன் தொடர்பிலிருந்தேன். பின் நேரடியான பரிச்சயம் இல்லை. அநேகமாக விடுதலைப் புலிகளுக்கு மிக இறுக்கமாக இருந்த சில தனிப்பட்ட நண்பர்கள் ஊடாக தெரிந்து கொண்டவைதான் எஞ்சியவை. ஆகவே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உள்ளே நடந்த எத்தனையோ சம்பவங்களினாலும், அவர்களுக்கும் மற்ற இயக்கங்களுக்கும் இடையே இருந்த பூசல்கள், அவற்றில் பாலசிங்கத்தின் ஆளுமை எவ்வளவில்

நாட்டுவதற்காக, அந்த ஒழுங்காக மீறியோர் துரோகிகளாக அழிக்கப்பட்டார்கள். அல்லது அவரது செயல்திறனிற்கு இடைஞ்சலாக இருப்பவர்கள் எல்லோரும் இல்லாமல் ஆக்கப்பட்டனர். அவரது இராணுவத் தீர்வு என்ற சித்தாந்தத்தில் அவர் ஏற்றுக் கொண்டது தனித் தமிழீழமே. மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டதும் அதுவே. அதற்காக தாங்கள் செய்யும் இராணுவ நடவடிக்கைகளில் மக்கள் பார்வையாளராக இருந்தால் போதும் எனக் கருதினார் போலும். அதற்காக சிங்கள இராணுவத்தை கொல்லுதல், முகாம்களைத் தகர்த்தல், எல்லை கிராமங்களிலிருந்து சிங்கள மக்களை விரட்டுதல் என்பவற்றில் புலிகள் நம்பிக்கை வைத்தார்கள்.

ஓர் இடதுசாரிச் சிந்தனைப் போக்கை பாலசிங்கம் முழுமையாகக் கைப்பிடித்திருந்தாலும், இந்த வலது சாரிப் போக்கினரோடு இணைந்திருந்தார்.

ரெலோவும் அந்த அடிப்படைத் தத்துவத்தில் பிராந்திய சக்தியான இந்தியா அரசியலை நியமிக்க, தமிழ் மக்கள் அதற்கு ஆதரவான முறையில் இயங்க வேண்டும் என்ற கருத்தையும் கொண்டிருந்தது. ஆனால் பாலசிங்கம் இந்தியாவில் எல்லோரையும் சந்தித்தும் கூட, இடதுசாரி போக்குள்ள ஈரோஸையோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்வையே விடுதலைப் புலிகளோடு சோஸலிச தமிழ் ஈழம் நோக்கி சேர்த்துக் கொள்ளவில்லை. அதை விடுதலைப் புலிகளின் பிரபாகரனும் ஏற்றிருக்கச் சாத்தியமில்லை.

ஆகவே அவரது கணக்கில், தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ பலத்தினால் ஒரு செல்வாக்கு நிலையிருந்ததால் அதன் அரசியல் தலைமை, தன்னிடம் இருக்கவேண்டும், அது மிதவாத கூட்டணியினரிடமோ, அமிர்தலிங்கத்திடமோ இருக்கக்கூடாது என்று எண்ணியிருக்க வேண்டும். என்னுடனான அவரது பேச்சுக்கள் இதனைத்தான் சுட்டிக்காட்டின. அமிர்தலிங்கத்துக்கெதிரான அவரது காழ்ப்புணர்வின் வெளிப்பாடு அது. பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அவர்களுடன் இருந்த உறவையும் அது பாதித்தது. பிரபாகரன் தானே தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவராக விடுதலையை முன்னெடுத்து செல்ல வேண்டும் என்ற கனவுக்கும் அடித்தளம் போட்டு கொடுத்தது.

**244. ஏன் அப்படி கருதுகிறீர்கள்?**

மிதவாதிகளோ, தீவிரவாதிகளோ, இடது சாரியோ, வலது சாரியோ இந்திய அரசு திம்பு பேச்சு வார்த்தைகளுக்கு தமிழ்தேசியப் பரப்பில் இயங்கிய எல்லோரையும் அழைத்திருந்தது. அந்த பேச்சு வார்த்தைகளுக்கு போகும் முன்னே எல்லோரும் ஒற்றுமையாக செல்லவேண்டும் என்ற கருத்துக்கள் (இப்பொழுது போல் அப்போதும்) இருந்தன. ஆனால் பாலசிங்கமோ தனது அரசியல் அறிவின் ஆளுமைகளில் அவருக்கு பரிச்சியமான இடது சாரி அமைப்புகளோடு சேர்ந்து நின்று முக்கியமாக தமிழர் விடுதலை கூட்டணி தமிழர் மத்தியில் இருந்து மெது மெதுவாக அவர்களது இருப்பை தொலைத்துக் கொண்டு வெறும் அடையாளக் கட்சியாக இருப்பதால் அவர்களது தலைமையின் கீழ் விடுதலை இயக்கங்கள் பேச்சு வார்த்தைக்கு இணங்கக்கூடாது என்ற நிலைப்பாட்டை முன்னெடுத்தார். எல்லா தேசிய பரப்பும் தனித்தனியாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்தினார்.

அந்த நாள்களில் நான், கந்தசாமி போன்றோர் சட்டத்தரணி சந்தியேந்திராவை அணுகி அவர் திம்புபேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள கேட்டிருந்தோம். ஜே.ஆரின் சகோதரர் பிரபல சட்டத்தரணி எச்.டபிள்யூ. ஜெயவர்தனா அரசாங்கத்தின் சார்பாக வருவதால் அது காத்திரமாக இருக்கும் என்று அபிப்பிராயப்பட்டோம். அவை பற்றிய பாலசிங்கத்துடன் பேசிய போது அவர் அதற்கு இணங்கவில்லை. விடுதலைப் புலிகளுக்கும் மற்றோருக்கும் உள்ள எண்ணப் போக்கை வெளிப்படுத்தினார். அமிர்தலிங்கம், இந்திரா காந்தியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைச் சொல்லி, அந்த தொடரில் போவது நல்லது என்று விளங்கப்படுத்தியும் அவர் இணங்கவில்லை. அமிர்தலிங்கம் அல்லது கூட்டணியின் ஆளுமை மட்டுப்படுத்தப்பட வேண்டும், அவர்களுக்கு விடுதலைப் போரில் உரிமை கோருவதற்கு தகுதியும் இல்லை என்பது அவரது நிலைப்பாடு. ஆனால் திம்பு பேச்சு வார்த்தைகளில் பின்னர் நடைபெற்ற சகோதர படுகொலைகளில் அழிக்கப்பட்ட வலது சாரியான ரெலோ, இடதுசாரியான ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ் என்பவற்றை அவரது ஆளுமை எப்படி கையாண்டது என்பதில் எனக்கு பல விசனங்கள் இருக்கின்றன. ஆனால் வந்த பதிலோ தன்னால் பிரபாகரனது இராணுவ நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாமலிருக்கிறது என்பதுதான். அவர்கள் இராணுவ பலத்தினாலேயே வெற்றி வருமென நினைக்கிறார்கள் ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகளும் இதற்கு தீனி போடுகின்றன என்றார்.

இந்த முரண்பாடுகளை தமிழ் மக்களின் நலனுக்காக முன்னரே வெளிக்காட்டாமல், விடுதலைப் புலிகள் வெற்றி கொண்டு தமிழீழம் அமைந்து விட்டால் அரசியல் தலைமையில் அவர் குளிகாயலாம் என நினைத்தாரோ தெரியாது.

ஆனால் பிரபாகரனது போக்கால், எவ்வளவு இராணுவ கட்டுப்பாடுகளும், ஆயுதங்களும், பலமும் இருந்தென்ன, எல்லா சர்வதேசமும் இந்தியா உட்பட சேர்ந்து விடுதலைப் புலிகளை அழிக்க நடவடிக்கைகள் எடுத்தால் பிரபாகரனால் எவ்வளவுதான் பேசினாலும், துள்ளினாலும் அதை கட்டுப்படுத்த முடியாது, இப்பொழுதாவது ஒருதீர்வை ஏற்று இருப்பதை நிலை நிறுத்திகொள்ளாவிட்டால் எல்லாவற்றையும் இழந்து விடலாம் என்ற அரசியல் உள்ளுணர்வு அவரது முரண்பாட்டை வெளிக்காட்டி, ஒஸ்லோ தீர்மானத்தில் கையெழுத்து வைத்தது. அது காலம் கடந்த அணுகுமுறையாக அமைந்தது.

அதையாவது அந்த நேரம் ஏற்றிருக்காலம். ஆனால் பிரபாகரன் அதற்கும் ஒத்துவரவில்லை. அதனால் இந்தியாவின் ஜெய்சங்கர் கூட, இப்பொழுது இருப்பதைத் தக்க வைத்து கொள்ளுங்கள் என்கிறார். அது எது?

(வளரும்...)

# ‘சொல்லின் செல்வர்’ செல்லையா இராஜதுரை

## இன்று அவருக்கு வயது 94

எஸ்.டி.எஸ்.உதயநாயகம்

அங்கம் 01



**ஒரு காலத்தில் தந்தை செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சி என்ற இரட்டைக் குழல் துப்பாக்கியின் சுடுகுழல்களாகக் கனன்றவர்கள் இருவர். ஒருவர் - வடக்கின் அமிர்தலிங்கம். மற்றவர் - கிழக்கின் மட்டுநகர் தந்த ‘சொல்லின் செல்வர்’ இராஜதுரை. அரசியலில் இருந்து கால் நூற்றாண்டுக்கு மேல் ஒதுங்கி சாயி பக்தராக அமைதியாக சென்னையில் வாழ்கின்றார் இராஜதுரை. அவருக்கு இன்று 94 ஆவது பிறந்தநாள்.**

**அவரது மிக நெருங்கிய நண்பராக இருந்தவர் ஊடக ஜாம்பவான் அமரர் எஸ். டி .எஸ். சிவநாயகம். சிவநாயகம் ஐயாவின் மகன் எஸ். டி.எஸ்.உதயநாயகம் தனது தந்தையாரின் நெருங்கிய நண்பர் பற்றிய நினைவுகளை இங்கே பகிர்கின்றார். மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க தேவையில்லை என்பர். எஸ்.டி.எஸ். ஐயாவின் ஆற்றொழுக்கான எழுத்தோட்டத்தை மகனின் இந்த நினைவுப் பகிர்வில் நீங்கள் காண முடியும்.**

**கொழும்பு ஸ்ரீ சத்திய சாய் பாபா மத்திய நிலையத்தை ஸ்தாபித்து அதன் தலைவராகக் கால் நூற்றாண்டு காலம் விளங்கினார் எஸ்.டி.எஸ்.சிவநாயகம் அவரைத் தொடர்ந்து அவரின் வழியில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக அதன் தலைவராக இருந்து அதனை வழிநடத்தி வருகின்றார் எஸ்.டி.எஸ். உதயநாயகம்**

1952 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு, அமிர்தகழியைச் சேர்ந்த சட்டத்தரணி திரு ஆர்.பி.கதிர்காமர் சுயேச்சையாகப் போட்டியிட்டார். தமிழரசுக் கட்சி அவருக்கு ஆதரவளித்து, மட்டக்களப்பு மைதானத்தில் மாபெரும் கூட்டத்தை ஒழுங்கு செய்தது. அந்த மேடையில் ஒல்லியான ஓர் இளைஞர் உரையாற்றினார். அவருடைய வாயிலிருந்து வெளிவந்த



தமிழ்சொற்கள் அனைத்தும் கேட்டிருந்தோர் செவிகளில் தேனாகப் பாய்ந்தன. சொல்வளம் மிக்க பேச்சாளர். அன்றுதான் மட்டக்களப்பு மட்டுமல்ல, முழு இலங்கையும் ஒரு சிறந்த தமிழ்ப் பேச்சாளரைக் கண்டது - கேட்டது. தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் அந்த இளைஞனின் சிங்கக்குரல் எதிரொலித்தது. இந்தக் குரலுக்குரிய இளைஞர்தான், மட்டக்களப்பு அரசியல்வானில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய, ‘சொல்லின் செல்வர்’ செல்லையா இராஜதுரை.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி பிள்ளையார் கோவில் அருகில், ஒரு கடையை செல்லையா நடத்தி வந்தார். அவருக்கு மகனாக 27.07.1927 அன்று இராஜதுரை பிறந்தார். தனது ஒரே மகனை தங்கத்தால் அணிகலன்கள் பூட்டி மகிழ்ந்தார்.

தமிழில் உயர் வகுப்பு வரை படித்துவிட்டு, மத்திய கல்லூரியில் ஆங்கிலம் பயின்றார் இராஜதுரை. பள்ளிப்படிப்பை விட உலகியல் படிப்பை மேற்கொள்வதில் நாட்டம்செலுத்தினார். இளமைக்காலத்தை கோட்டைமுனையின் ஒரு பகுதியான மோர்சாப்பிட்டியில் கழித்தார். அப்போது மட்டக்களப்பிலிருந்த, இரண்டு புத்தகசாலைகளில் கதியேன்று இருப்பார். இவரது புத்தகப்பசியை ஆனந்தா புத்தகசாலையின் மகாலிங்கம் தீர்த்து வைத்தார். புளியந்தீவு சேதுராமன் செட்டியாரின் நிறுவனத்தின் பொன்னையா என்பவர் தமிழ்நாட்டிலிருந்து நூல்களையும் சஞ்சிகைகளையும் தருவித்து உதவினார். தமிழில் தனது ஆற்றலை இராஜதுரை வளர்த்து வந்தார். இதன் காரணமாகவே அவருடைய மேடைப்பேச்சும் எழுத்தாற்றலும் வளர்ச்சியடையத் தொடங்கின. ‘கல்கி’ பத்திரிகையில் ‘பழிக்குப்பழி’ என்ற சிறுகதையை எழுதினார். மன்னன் காசியப்பனின் வாழ்வின் வரலாற்று நிகழ்வுகளைப்பின்னணியாகக் கொண்ட சரித்திரக் கதையாக இது அமைந்தது. தொடர்ந்து ‘ராசாத்தி’, ‘மிஸ் கனகம்’ போன்ற பல கதைகளை எழுதி, தான் ஒரு எழுத்தாளன் என்பதை நிரூபித்தார்.

அந்தக் காலகட்டத்தில் மட்டக்களப்பில், திராவிடக் கொள்கையில் உருவான சுயமரியாதை குழுவினரின் ‘சுத்தானந்த பகுத்தறிவு கழகத்தை’ நடத்தி வந்தவர் பின்னாளில் பத்திரிகை ஜாம்பவானான எஸ்.டி.சிவநாயகம் அவர்கள். அந்தப் பகுத்தறிவு பட்டறையில் சேர்ந்துகொண்டு, நாத்திகராகப் போராட்டங்களில் கலந்துகொண்டார். மட்டக்களப்பு மைதானத்தில், சகல சமூகங்களையும் சேர்ந்தவர்களையும் – சலவைத் தொழிலாளி, சவரத் தொழிலாளி, இசை வேளாளர்கள், சீவல் தொழிலாளி ஆகிய சமூகங்களைச் சேர்ந்தவர்களையும் ஒரே மேடையில் வைத்து நடத்திய கூட்டம், பெரும் போராட்டகளமாக மாறி, கல்லெறி வீசப்பட்டது. இராஜதுரை மீது வீசப்பட்ட கல், அவர் இடது கண்ணைப் பதம் பார்த்தது. அதன் தழும்புகள் இன்றும் இடது கண்ணில் காட்சி தருகின்றன.

மட்டக்களப்பிலுள்ள மாரியம்மன் கோவிலில் வருடாவருடம் ஆடு, கோழிகளைப் பலி கொடுக்கும் சடங்கு நடக்கும். பகுத்தறிவாளரான அவர், அந்த இடத்துக்குச் சென்று, கோவில் பூசாரியை அடித்துத் துவைத்த சம்பவமும் உண்டு. அதே சமயம் இடதுசாரி அரசியல் கொள்கையில் ஈடுபட்டு, இரவு நேரங்களில் சிறு குழுவாகச் சேர்ந்து, சிவப்பு மை வாளியுடன் தூரிகைகளையும் ஏந்தி தெருக்களிலுள்ள வீட்டுச் சுவர்களில் அரிவாளும் கத்தியும் கொண்ட அடையாளங்களை பொறித்ததுண்டு.



இளம் இராஜதுரை...

ஒரு பத்திரிகையை நடத்த வேண்டும் என்ற ஆசையில், ‘லங்கா முரசு’ என்ற சஞ்சிகையைத் தொடங்கினார். எழுத்துப் பிரதியை கொழும்பிலுள்ள ஒரு அச்சகத்துக்கு அனுப்பிவைத்து, அச்சிட்டு, கிராமம் கிராமமாக விநியோகம் செய்தார். தனது லங்கா முரசு சஞ்சிகையின், விற்பனை வளர்ச்சிக்காக, பித்தன் என்ற ஒரு எழுத்தாளனின் ‘இருட்டிலே’ என்றதொரு சிறுகதையை பிரசுரித்திருந்தார். இது சற்று ஆபாசமாகவே இருந்தது. ஏற்கனவே இராஜதுரை அவர்களுக்கு அவருடைய தந்தையார் போட்டு அலங்கரித்து, ஜொலித்த பொன்நகைகள், ஒவ்வொன்றாகக் கழற்றி எடுக்கப்பட்டே ‘லங்கா முரசு’ ஜொலிக்க வைக்கப்பட்டது. இதனை அறிந்த தந்தையார் செல்லையா தனயன் இராஜதுரையை கடுமையாக வை(த்)து வாங்கினார். லங்கா முரசும் ஓய்ந்தது.

பிறகு ‘தமிழகம்’, ‘முழக்கம்’, ‘சாந்தி’ என்ற பத்திரிகைகளும் நடத்தியிருந்தார்.

‘கண்ணகி’ திரைப்படம் 1940 ஆம் ஆண்டு வெளிவந்தது. இதனைப் பல தடவைகள் பார்த்து, அதிலுள்ள கதை வசனங்களை எழுதியெடுத்து மனப்பாடம் செய்துகொண்டார். அவரது தாய்மாமன் அரியநாயகம் உதவியுடன் ‘கண்ணகி’ நாடகத்தை உருவாக்கி, கண்ணகியாக வேடம் இட்டு பட்டிதொட்டி எங்கும் மேடையேற்றினார். அவரது உயிர் நண்பர் இரா. பத்மநாதன் மாதவியாக நடித்திருந்தார். பகுத்தறிவு பட்டறையில் எஸ்.டி.எஸ். தயாரித்த ‘மாயாவி’ என்ற நாடகத்திலும் நடித்திருந்தார். நாடக மேடையிலும் மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவமும் உண்டு.

தமிழரசுக் கட்சி வளர்ச்சிக்காக, யாழ்பாண இராஜ்ஜியத்தின் கடைசி மன்னனான ‘சங்கிலியன்’ கதையை நாடகமாக உருவாக்கி, அதில் சங்கிலியனாக நடித்தார் இராஜதுரை. கடைசிக் காட்சியில் சங்கிலியனைச் சுடுவதற்காக, வெள்ளைக்கார வேடம் போட்ட ஜோசப் என்பவரிடம், இரட்டை குழல் துப்பாக்கியை எடுத்துவந்து கொடுத்த போது, உள்ளே தோட்டா இருப்பதை பரிசீலிக்கவில்லை. திடீர் என்று பாய்ந்தார் அவரது உயிர்த் தோழன் பத்மநாதன். மேடை ஏறி துப்பாக்கியைத் திறந்து பார்த்தபோது, உள்ளே இரண்டு தோட்டாக்கள் இருந்தன. அனைவரும் பதைபதைப்படைந்தார்கள். இராஜதுரை கலங்கவில்லை.

1958 ஆம் ஆண்டு மே மாதம் இனக் கலவரம் தோன்றுவதற்கும், இராஜதுரை கொலை முயற்சியும் மற்றுமொரு காரணமாக இருந்தது. அந்த சம்பவத்தையொட்டி நடிகர் ‘சோ’ பாணியில் ‘சூடு சாம்பலாச்சு போடியாரே’ என்ற அரசியல் கலந்த நகைச்சுவை நாடகத்தை எழுதி, அனைத்து தமிழரசு கட்சி மேடைப் பிரச்சாரங்களில் நடித்துக் காட்டினார்.

கொழும்பில் பிரபலமாக, விற்பனையாகிக் கொண்டிருந்த, தமிழரசுக் கட்சியின் ‘சுதந்திரன்’ பத்திரிகையில் திருஎஸ்.டி.எஸ்.அவர்களுடன் இணைந்து கொண்டார். அந்தப் பத்திரிகை மூலமாக நாஸ்திக கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகளையும், இலக்கிய கட்டுரைகளையும் எழுதி வந்தார். ஆனால் இவரது நாட்டம் அரசியல் மேடைப் பேச்சில் இருந்தது. இதனை உணர்ந்த எஸ்.டி.எஸ். இவரை ஓர் அரசியல்வாதியாகக் காண விரும்பினார். சுதந்திரனிலிருந்து வெளியேறிய இராஜதுரை மட்டக்களப்பில் மீண்டும் குடியேறி, சுதந்திரனுக்கு அரசியல் நிருபராகவும், நெல் சந்தைப்படுத்தும் சபையின் நிர்வாகியாகவும் செயற்பட்டார். வீட்டுக் கைத்தொழிலாக ‘ரவீந்திரா பற்பொடி’ என்று ஒரு சிறு தொழிலையும் நடத்தி வந்தார்.

தமிழ் காங்கிரஸ் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தை விட்டு, தந்தை செல்வாவுடன், கோப்பாய் வன்னியசிங்கமும் வெளியேறினார். ‘பெரும்பான்மையினரிடமிருந்து சிறுபான்மையினர் யாசித்துத்தான் உரிமையைப் பெற வேண்டும் என்ற நிலை ஏற்படாமல், இந்த நாட்டுக்கு சமஷ்டி முறையிலான கூட்டாட்சியே உகந்தது’ என்று கூறி புதிய கட்சியை ஆரம்பித்து, அந்தக் கொள்கையை வடக்கு கிழக்கு பிரதேசங்களில் ஒலிக்கச் செய்வதற்காக, இராஜதுரையை நாடினார்கள். அதே நேரத்தில் இராஜதுரை, பகுத்தறிவுக் கூட்டங்களிலும், இடதுசாரிக் கூட்டங்களிலும் சிறப்புப் பேச்சாளராக, அழகுதமிழில் உரையாற்றியும் வந்தார்.

இவரது பேச்சுக்கு மக்கள் கூட்டம் அலை மோதியது. மக்கள் மத்தியில் இவரது செல்வாக்கு பெருகியிருந்தது. இளைஞர் பட்டாளம் அவரைச் சூழ்ந்திருந்தது.

1949 ஆம் ஆண்டு, தமிழரசுக் கட்சிக் கொள்கையை அறிமுகப்படுத்த, தந்தை செல்வா, வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் போன்றோர் மட்டுநகர் சென்ற சமயம், அவர்களை வரவேற்க யாரும் முன்வரவில்லை. இராஜதுரையும் மூன்று இளைஞர்களும் மட்டும் சந்தித்தார்கள். அந்தப் அறிமுகப் பொறுப்பை இராஜதுரை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டார்கள். அப்போது தமிழரசுக் கட்சிக் கொள்கையை இராஜதுரை அவர்கள் அறிமுகம் செய்தபோது அவர் சந்தித்த எதிர்ப்புக்கள், அபாயங்கள் ஏராளமானவை. அறிமுகக் கூட்டம் முடிந்து வீடு செல்லுமுன் காடையர்களால் தாக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. களுதாவளைக் கூட்டத்தில் அவருக்கு விழுந்த அடியின் தழும்புகளை இன்னும் அவரது வலது தோளில் காணலாம்.

மட்டக்களப்பில் இராஜதுரை அவர்க



அண்ணாவுடன்...

ளின் தனிப்பட்ட செல்வாக்கை அறிந்த தந்தை செல்வா, கோப்பாய் வன்னியசிங்கம் மற்றும் பலர் மட்டக்களப்புத் தொகுதி வேட்பாளராக, தமிழசுக் கட்சி சார்பாக போட்டியிடும் சந்தர்ப்பத்தை எற்படுத்தினர். முதன் முதலாக 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், மட்டக்களப்பிலிருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவானார். பெரும் பணம் படைத்தவர்களுடன் போட்டியிட்டு வென்ற ஒரு பாமரன். இவரது பேச்சுத் தான், இவரது வெற்றிக்கு கை கொடுத்தது. சிரித்த முகத்துடன் மட்டுநகர் பெரும்பான்மையான மக்களை அரவணைத்துக் கொண்டார். இவரை ‘எம்.ஜி.ஆர்.’ என்றும் ‘எங்கள் வீட்டுப் பிள்ளை’ என்றும் அழைத்துப் பெருமைப்பட்டனர் மட்டு நகர் மக்கள்.

(வளரும்......)



சங்கிலியனாக...

காலைக்கதிர் Kalaikkathir

# ஆசிரியர்களின் தொழிற் சங்க நடவடிக்கைகளை கைவிடுமாறு கோருகிறார் கல்வியமைச்சு செயலர்

அனைத்து ஆசிரியர்களுக்கும் முதன்மை தொழிற்சங்கங்களுக்கும் தங்களது தற்போதைய தொழிற்சங்க நடவடிக்கையைக் கைவிட்டு இணையம் மூல கற்பித்தல் நடவடிக்கைகளைத் தொடருமாறு கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாணவர்கள் படிப்பைத் தொடர முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, கொவிட் தொற்றுநோயுடன் நாடு போராடும் இந்த முக்கியமான கட்டத்தில், கற்பித்தல் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்துப் பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் எழுப்பியுள்ள பிரச்சினைகள் கடந்த 24 ஆண்டுகளாகத் தொடர்கின்றன.

இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் கைகளில் மிகப்பெரிய பொறுப்பு உள்ளது. கல்வி அமைச்சர் விரைவில் இது தொடர்பில் ஒரு விரிவான அறிக்கையை வெளியிடுவார்.

ஆசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பான அமைச்சரவை அறிக்கை ஏற்கனவே விவாதத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் அமைச்சின் செயலாளராக, இணையக்கல்வியைத் தொடரக்கூறுவதைத் தவிர தம்மிடம் எதுவும் இல்லை.

இதேவேளை அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு, சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு இன்று (செவ்வாய்க்கிழமை) பிரச்சனைகள் குறித்து விவாதிக்க வாய்ப்பு வழங்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பெரேரா தெரிவித்துள்ளார்.

## சிறுவர்களை தொழிலுக்கமர்த்த அனுமதிக்கும் பெற்றோரைத் தண்டிக்க புதிய சட்டம் - ஜீவன்

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளை எவரும் அடிமைப் படுத்த முடியாது என்பதற்காக தொழிலாளர் கட்டளைச் சட்டத்தை வலுப்படுத்த பேச்சு இடம்பெற்று வருவதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

100 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த தொழிலாளர் கட்டளைச் சட்டமே தற்போதும் காணப்படும் நிலையில் சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்த அனுமதிக்கும் பெற்றோரை தண்டிக்க புதிய சட்டங்களை கொண்டு வரத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களில் பொருளாதாரப் பிரச்சினைகள் இருந்தாலும் சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவது அதற்கான தீர்வு அல்ல என்றும் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டார்.

இதேவேளை ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணிபுரிந்த ஹிஷாலினியின் மரணம் தொடர்பான பொலிஸ் விசாரணையில் தான் திருப்தி அடைகிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம் குறித்த சிறுமியின் உயிரிழப்பை சிலர் அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர் என்றும் ஜீவன் தொண்டமான் குற்றம் சாட்டினார்.

## சாதாரண தரப்பரீட்சை அடுத்த ஆண்டு நடக்கும்

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை அடுத்த ஆண்டு நடைபெறும் என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.

அதன்படி அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி முதல் மார்ச் 03 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறும் என கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மேலும் உயர்தரப் பரீட்சை நவம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் டிசெம்பர் 10 வரை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பிரேமதாஸ மைதான ஊடக அறை கொரோனாத் தொற்றினால் மூடல்

இலங்கை, இந்திய கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான முதலாவது 20 இற்கு 20 போட்டியின் போது, ஆர். பிரேமதாஸ மைதானத்தின் ஊடக அறை மூடப்பட்டுள்ளது.

அதில் பணியாற்றும் பணியாளர் ஒருவர் கொவிட் தொற்றுடன் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து அந்த அறை மூடப்பட்டுள்ளது.

போட்டி ஆரம்பமாவதற்கு சற்று முன்னர், கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் சோதனையின் போது அவர் தொற்றாளராகக் கண்டறியப்பட்டார்.

இந்த நிலையில் இரண்டு அணிகளுக்கு இடையிலான இரண்டாவது 20 இற்கு 20 போட்டியின் போது சுகாதார அனுமதியின் படி ஊடக அறை மீண்டும் செயற்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

## யாழ். இந்திய துணைத் தூதரை சந்தித்த சிறிதரன் மற்றும் சாள்ஸ்

யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலசந்திரனை தமிழ்த் தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துள்ளனர்.

அவரது இல்லத்தில் வைத்து நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சிவஞானம் சிறிதரன் ஆகியோர் மரியாதை நிமிர்த்தமாகச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.



## சமையல் எரிவாயு விலை வர்த்தமானி வெளியீடு



நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) முதல் அமுலாகும் வகையில் 18 லீற்றர் (9.6 கிலோகிராம்) சமையல் எரிவாயு கொள்கலனின் ஆகக்கூடிய சில்லறை விலை 1,150 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு கொள்கலனின் ஆகக்கூடிய சில்லறை விலையை நிர்ணயித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, சமையல் எரிவாயுவை மாவட்டங்களில் விற்பனை செய்யக்கூடிய ஆகக்கூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலை மாணவனுக்கு டெல்டா கொரோனா உறுதி

பாடசாலை மாணவர் ஒருவருக்கு டெல்டா கொவிட் திரிபு தொற்று உறுதியாகியுள்ளது.

கொவிட் வைரஸ் தொற்றின் ஆபத்தான திரிவுகளில் ஒன்றான டெல்டா தொற்று உறுதியான முதல் பாடசாலை மாணவர் என களுத்துறை மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆர்.ஜீ. சிங்கபாகு தெரிவித்துள்ளார்.

பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கிரிகல்கொடல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 11 வயதான மாணவர் ஒருவர் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இலங்கையில் டெல்டா திரிபு பதிவான முதல் பாடசாலை மாணவர் இவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## மோட்டார் சைக்கிளில் கேரள கஞ்சாவை கொண்டு சென்றவர் திருமலையில் கைது

திருகோணமலை மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் மோட்டார் சைக்கிளில் கேரளா கஞ்சாவை கொண்டு சென்ற நபரொருவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளோம் என திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித் தனர்.

மன்னாரில் இருந்து திருகோணமலைக்கு கஞ்சாவை கொண்டு செல்லும்போது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது..

விமானப்படையினரின் புலனாய்வுத் துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து திருகோணமலை சர்தாபுர விசேட பொலிஸ் அதிரடிப்படை பொறுப்பதிகாரி குழுவினர் மேற்கொண்ட சோதனையின் போது குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் என்.சீ. வீதியினூடாக மணிக்கூட்டு கோபுரம் பக்கமாக செல்லும் போது சோதனையிட்ட போது அவரிடமிருந்து 01 கிலோ 250 கிராம் கேரளா கஞ்சாகைப்பற்றப்பட்டுள்ளது.

அவரின் மோட்டார் சைக்கிள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை - சமுத்ராகம ஓட்டை வீதியில் வசித்துவரும் துவான் ரஹீம் ஆப்தீன் (53 வயது) உடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சந்தேக நபரை விசாரணை செய்து வருவதாகவும் விசாரணையின் பின்னர் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

## மதுபோதையில் இளைஞர் குழு வவுனியாவில் கடும் அட்டகாசம்

### நால்வர் வைத்தியசாலையில் சேர்ப்பு

வவுனியா - ஈச்சங்குளம் பகுதியில் மதுபோதையில் சென்றவர்கள் தாக்கியதில் பெண் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் கடந்த (ஞாயிற்றுக்கிழமை) வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் மதுபோதையில் நின்றிருந்த ஐந்து பேர் கொண்ட இளைஞர் குழுவினர் அப்பகுதியில் நின்ற பொதுமக்கள் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பெண் உட்பட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை ஈச்சங்குளம் பொலிஸார் கைதுசெய்துள்ளமையுடன், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன்போது குறித்த பகுதியில் உள்ள தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த வவுனியா பிராந்திய ஊடகவியலாளர் கோபாலகிருஸ்ணன் ரூபகாந் மீதும் மேற்படி குழுவினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் காயமடைந்த அவர் வவுனியா வைத்தியசாலையின் விபத்து பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஹிஷாலினியின் உடல்நிலை திடீரென மோசமடைவு அதனாலேயே அவரிடம் வாக்கு மூலம் பெறவில்லை!

### பொலிஸார் விளக்கம்

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் பணிபுரிந்த 16 அகவை சிறுமியின் மரணம் தொடர்பில் இலங்கை பொலிஸ் சுயாதீன விசாரணையை மேற்கொண்டு வருகிறது.

அனைத்து குற்றவாளிகளையும் நீதிக்குக் கொண்டு வருவதற்காக, அனைத்து உண்மைகளும் பாரபட்சமின்றி மற்றும் தவறாமல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில், துணை மன்றாடியார் நாயகம் உட்படப் பல அதிகாரிகள், முறைப்பாட்டாளர் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகி விசாரணைகளை முறையாக மேற்கொள்ள ஆலோசனை வழங்குகிறார்கள்.

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான காவல்துறை அதிகாரியின் மேற்பார்வையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில், சிறுமி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது பொலிஸார் அவரிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்யவில்லை என்ற கூற்றுக்குப் பதிலளித்துள்ள பொலிஸார் -

சம்பவம் நடந்த உடனேயே விசாரணை தொடங்கிய போதிலும், பாதிக்கப்பட்டவரின் உடல்நிலை மோசமாக காணப்பட்டதால் காரணமாக வாக்குமூலங்களைப் பதிவு செய்ய முடியவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ். மாவட்ட அரச அதிபராகவும் சிங்களவரை நியமிக்கத் திட்டம்

## நிறுத்துமாறு கோரி மஹிந்தவுக்கு சம்பந்தன் கடிதம்

**தமிழ் பேச தெரியாத ஒரு அரச உத்தியோகத்தரை மாவட்ட அரச அதிபராக யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு நியமிப்பது பொருத்தமற்ற ஒரு விடயமாகும்.மேலும், இது ஜனநாயக விரோதமான செயலாகும்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

**யாழ். மாவட்டத்துக்குத் தமிழ் பேச முடியாத ஒருவர் அரச அதிபராக நியமிக்கப்பட இருக்கின்றார் என்ற தகவல் வெளியாகியுள்ள நிலையில், அந்த நியமனத்தை நிறுத்துமாறு கோரி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.**



அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்துக்கு விரைவில் தமிழ் பேச முடியாத ஒருவர் அரச அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட இருக்கின்றார் என நான் அறிந்துகொண்டேன்.

நீங்கள் அறிந்திருக்கின்ற பிரகாரம், யாழ்.மாவட்டத்தில் 95 வீதமானவர்கள் தமிழ் பேசும் சமூகத்தினராவர். மேலும், 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களும் தமிழ் பேசும் சமூகத்தைச் சார்ந்தவர்களாவர்.

இந்தப் பின்னணியில் தமிழ் பேச தெரியாத ஒரு அரச உத்தியோகத்தரை மாவட்ட செயலாளராக/அரச அதிபராக யாழ். மாவட்டத்துக்கு நியமிப்பது பொருத்தமற்ற ஒரு விடயமாகும். மேலும், இது ஜனநாயக விரோதமான செயலாகும்.

மாவட்டத்திலுள்ள உயர் பதவியில் இருக்கும் அரச உத்தியோகத்தர் தமிழ் பேசும் ஒருவராக இருக்கும் சந்தர்ப்பத்தில் தான் அவருடனான வாய்மூல மற்றும் எழுத்துமூல தொடர்பாடல்கள் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும், தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான பூர்வீக இடங்களான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய அரசமைப்பின் ஊடாக அதியுச்ச அதிகாரப் பகிர்வை வழங்க அரசு முயற்சிகளை எடுக்கும் சந்தர்ப்பத்தில் இத்தகைய செயற்பாடுகள் எதிர்மறையான விளைவையும், மக்களால் வரவேற்கப்பட முடியாத ஒன்றாகவுமே காணப்படுகின்றது.

எனவே, அத்தகைய பிரேரணையை மீளாய்வு செய்து, மேற்குறித்த விடயங்களைக் கருத்தில்கொண்டு யாழ். மாவட்டத்தின் மாவட்ட செயலாளராக/அரச அதிபராக அனுபவமும் செயற்திறனுமுள்ள தமிழ் பேசும் ஓர் அரச அதிகாரியை நியமிக்குமாறு நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன் - என்றுள்ளது.

# பிக்குகள் புடைசூழ கைதடி வந்த பந்துலசேன வடக்கின் பிரதம செயலாளராகப் பதவியேற்பு





(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாணத்தின் புதிய பிரதம செயலாளராக சமன் பந்துல சேன நேற்று பதவியேற்றார்.

வவுனியாவிலிருந்து பௌத்த பிக்குகள் புடைசூழ கைதடி வந்த அவர், சுபநேரமான முற்பகல் 11.45 மணியளவில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளராகக் கடமையாற்றிய அ.பத்திநாதன் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ள நிலையில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது

வவுனியா மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய சமன் பந்துலசேன கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட நிலையில், அவர் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் அதிகம் வசித்து வரும் நிலையில் தமிழ் பேசும் ஒருவர் வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்படாது சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர் வடக்கு மாகாணத்துக்குப் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டமைக்கு அரசியல் பிரதிநிதிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள நிலையில் சமன் பந்துலசேன தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

# மக்களுடன் கடமையாற்றும்போது மொழி ஒரு பிரச்சினையே இல்லை

## கடமையேற்ற கையுடன் பந்துலசேன தெரிவிப்பு



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

மக்களுடன் கடமையாற்றும்போது மொழி ஒரு பிரச்சினையான விடயமல்ல என்று புதிதாகப் பொறுப்பேற்ற வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன தெரிவித்தார்.

நேற்று வடக்கு மாகாண பிரதம செயலாளராக உத்தியோக பூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப் பேற்ற பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் வவுனியாவில் கடந்த ஒன்றரை வருடங்களாக அரச அதிபராகக் கடமையாற்றியிருந்தேன். வவுனியா வைப் பொறுத்தவரை தமிழ், சிங்கள இனத்தைச் சேர்ந்த அனைத்து மதங்களையும் உள்ளடக்கிய மக்கள் வசித்து வருகின்றார்கள். அவ்வாறான பிரதேசத்தில் கடந்த ஒன்றரை வருடங்களாக நான் கடமையாற்றி இருந்தேன்.

எனவே, நான் ஒரு சிங்களவனாக இருந்தாலும் தமிழ் பிரதேசத்தில் கடமையாற்றுவதில் எந்தவித இடையூறும் இருக்காது எனக் கருதுகின்றேன். அதாவது நாங்கள் மக்களோடு கடமையாற்றும் போது மொழி ஒரு பிரச்சினையாக இருக்காது - என்றார்.

# பதில் அரச அதிபராக திரேஸ்குமார் நியமனம்

வவுனியா மாவட்ட பதில் அரச அதிபராக உள்நாட்டு அமைச்சால் தி.திரேஸ்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட அரச அதிபராக இருந்த எஸ்.எம்.சமன் பந்துலசேன வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், பதில் அரச அதிபராக வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபராகக் கடமையாற்றிய தி.திரேஸ்குமார் நேற்றுமுன்தினம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

2003ஆம் ஆண்டு நிர்வாக சேவைக்குத் தேர்வான திரேஸ்குமார், முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய வேளை 10.02.2016 அன்று வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார்.

## ரிஷாத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைக்கப்பட்டுள்ளனர்.

ரிஷாத் பதியுதீனின் மனைவி, அவரின் மாமா மற்றும் சிறுமியை அந்த வீட்டுக்கு பணியாளராக அழைத்துச் சென்ற தரகர் ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ரிஷாத் பதியுதீனின் வீட்டில் சிறுமிக்கு முன்னர் பணியாற்றிய 22 வயது யுவதி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள ரிஷாத் பதியுதீனின் மைத்துனரையும் ஆகஸ்ட் 9ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைப்பதற்கு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டிருந்த இவர்கள் கடந்த சனிக்கிழமை நீதிமன்ற அனுமதியுடன் 48 மணித்தியாலங்களுக்குத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து அவர்கள் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது சம்பவம் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணை நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு விளக்கமளித்தனர்.

இதன்படி கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைப்பதற்கு நீதிவான் உத்தரவிட்டார்.

## 1, 653 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 98 ஆயிரத்து 169 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,405 பேர் நேற்று குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதன்படி நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 69 ஆயிரத்து 7 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## 48 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 48 பேரில் 30 ஆண்களும், 18 பெண்களும் அடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 147 ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir

# சிறுவர் துஷ்பிரயோக குற்றவாளிகளுடன் இணைந்து நாம் பணியாற்ற மாட்டோம்

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்

சிறுவர் கடத்தல், சிறுவர் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிகளுடன் தமது கட்சியால் இணைந்து பணியாற்ற முடியாது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கூறிய அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, சிறுவர்கள் மீதான அனைத்து வகையான துன்புறுத்தல்களையும் தமது கட்சி கண்டிக்கும் என்றும் அதுவே கட்சியின் நிலைப்பாடு என்றும் கூறினார்.

கூட்டணியில் கட்சிகளுக்கு சொந்தக் கொள்கைகள் இருந்தாலும் கட்சியின் கொள்கையை யாராவது மீறுவார்களாயின் அவர்களுடன் தொடர்ந்து பணியாற்ற முடியாது என்றும் குறிப்பிட்டார்.

இருப்பினும், ரிஷாத் பதியுதீனின் வீட்டில் இடம்பெற்ற சிறுமியின் மரணம் குறித்து நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

# கண்டாவளை பிரதேச செயலக ஊழியர் ஒருவருக்குக் கொவிட்

## அலுவலகப் பணிகள் இடைநிறுத்தம்

கிளிநொச்சி – கண்டாவளை பிரதேச செயலக ஊழியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமத்தினைச் சேர்ந்த கண்டாவளை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கு எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று (திங்கட்கிழமை), பிரதேச செயலகச் செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டு அங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஊழியர்களின் பி.சி.ஆர்.முடிவுகள் வெளிவந்ததன் பின்னரே பிரதேச செயலகச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும். எனினும் அத்தியாவசிய தேவைகளை அரச செயலகத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன், மக்களுக்கு தெரிவித்துள்ளார்.

# நீண்டகால கொள்கை கட்டமைப்பு அவசியம்

## ரணில் வலியுறுத்து



சீனாவின் நல்ல திட்டங்களை ஏற்றுக்கொண்டும் கெட்டவற்றை நிராகரித்து சீரான வெளியுறவுக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை அரசாங்கம் இந்தியா, சீனா மற்றும் ஐரோப்பாவுடன் ஒரு நல்ல உறவைப் பேண வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டுக்குத் தேவைப்படுவது பொதுவான எதிர்க்கட்சி கூட்டணி அல்ல, மாறாக நாட்டை கொண்டு நடத்த நீண்ட கால கொள்கை கட்டமைப்பு என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சரியான கொள்கை கட்டமைப்பை நிறுவத் தவறியமையே நல்லாட்சி அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் சீனா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் போன்ற பல நாடுகளைப் போலவே அரசமைப்பால் பாதுகாக்கப்படும் பொதுவான கொள்கைகள் நாட்டுக்கு அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# கொழும்பின் சில வீதிகள் நீரில் மூழ்கி உள்ளன



கொழும்பின் சில வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை முதல் பெய்துவரும் கடும்மழையின் காரணமாக இந்த நிலையேற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொரளை கின்ஸி வீதி, தும்முல்ல சந்தி மற்றும் ஆமர் வீதி உள்ளிட்ட வீதிகள் இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அந்த வீதிகள் ஊடான போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதிகள் ஊடாகப் பயணிக்கும் வாகன சாரதிகளும் பொதுமக்களும் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# ஒரு கோடியே 21 லட்சத்துக்கும் மேற்பட்ட தடுப்பூசிகள் இதுவரை கிடைக்கப்பெற்றன

இலங்கைக்கு இதுவரையில் 1 கோடியே 21 லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட கொரோனாத் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அவற்றுள் நூற்றுக்கு 72 சதவீதமானவை அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்காக இலங்கை 1,546 கோடி ரூபா செலவழித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், எதிர்காலத்தில் சீனாவிடம் இருந்து 16 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் அன்பளிப்பாக கிடைக்கவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இதுரையில் 80 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகளும் 5 லட்சம் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளும் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளும் ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 830 பைஸர் தடுப்பூசிகளையும் கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 52 ஆயிரத்து 144 பேருக்கு கொவிட் தடுப்பூசி மன்னாரில் இதுவரை செலுத்தப்பட்டுள்ளது

## பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் விநோதன் தகவல்



மன்னாரில் இதுவரை 52 ஆயிரத்து 144 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்துள்ளார்.

இதில் 46ஆயிரத்து 440 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே வைத்தியர் த.விநோதன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

மன்னாரில் பல்கலைக்கழக மற்றும் கல்வியியல் கல்லூரி மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு முதலாவது தடுப்பூசி ‘பைஸர்’ வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட 68 சதவீதமானவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

அவர்களுக்கான 2ஆம் கட்டத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை எதிர்வரும் 5 ஆம் திகதி இடம்பெற இருக்கின்றது.

மேலும் மக்கள் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டாலும் தொடர்ந்தும் சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும்.

இந்த தடுப்பூசியை செலுத்துவதன் ஊடாக பாரதூரமான கொரோனாத் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

ஆனாலும் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, இதனைப் புரிந்துகொண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டாலும் கூட சுகாதார நடைமுறைகளை மக்கள் இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும். -என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.07.2021 இல் வெளியிடப்பெற்றது.